விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 01 புதன்கிழமை (17.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## விநாயகம் தலைமையில் ஐரோப்பாவில் புலிகள்

### பேராசிரியர் ரொஹான் எச்சரிக்கை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் பிரிவு ஐரோப்பாவில் மீள இயங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பயங்கரவாத தடுப்பு தொடர்பான நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## வரதராஜப்பெருமாளுக்கு கொழும்பில் அரச வீடு

### சிங்கள இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாளுக்கு கொழும்பு 5 சமீட் பிளட்ஸ் வீடமைப்பு தொகுதியில் அரசாங்கம் வீடொன்றை வழங்கியுள்ளது என சிங்கள இணையம் செய்தி வெளியிட்டுள்ளது. அந்த இணையத்தில் வெளியான செய்தியில்,

மாடி வீட்டுத் தொகுதியில் இவருக்கு வீடு வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த வீடுகள் அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் மற்றும் காவற்றுறை உயர் அதிகாரிகள் தங்கியிருப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த முறையை மீறி அரசாங்கம் இந்த வீட்டை பெருமாளுக்கு வழங்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வரதராஜப்பெருமாள் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு ஆதரவைத் திரட்டும் நோக்கில் அவர் ஐரோப்பா சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் கூட்டங்களில் உரையாற்றியுள்ள பெருமாள் தற்பொழுது தமிழ் விடுதலைப் போராட்டம் முடிபடைந்து விட்டதாக கூறியுள்ளார். தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு அவர்கள் கொடுப்பதை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகவும் அந்த இணையம் குறிப்பிட்டுள்ளது. (ந-5)

## புலனாய்வுப் பிரிவினரே எம்மைத் தாக்கினர்

### ஜே.வி.பி. நா.உ. கொழும்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த காலத்தின் போதும் அதன் பின்னரும் கைது செய்யப்பட்டோரின் விபரங்களை வெளியிடக் கோரி யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் கையெழுத்துப் பெறும் திட்டத்தில் கலந்து கொண்டிருந்த மாணவர்கள் மற்றும் ஜே.வி.பியினர் மீது தாக்குதல் நடத்தியது இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என மக்கள் விடுதலை முன்னணி உறுதிபடத் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்றிரவு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவரும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி இதனை உறுதிப்படுத்தினார். (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபை உருவான பின்னரே உள்ளூராட்சி சட்ட மூலம் பரிசீலிக்கப்படும்

### த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னரே உள்ளூராட்சி சபைச் சட்ட மூலம் குறித்து பரிசீலிக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட மூலங்கள் இலங்கை அரசியல் யாப்பிற்கமையவே அமைந்துள்ளதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இச் சட்டமூலத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது எதிர்ப்பை வெளியிட்டு வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிடுகையில், உள்ளூராட்சித் தேர்தல் சட்ட மூலம் என்பது மாகாண சபைகளுக்குரியவை என்பதால் சகல மாகாண சபைகளிடமும் ஒப்புதல் (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சர் 25ஆம் திகதி இலங்கை வருகை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா உத்தியோக பூர்வ பயணமாக எதிர்வரும் 25 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை வரும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசவுள்ளார்.

இத (16ஆம் பக்கம் பார்க்க)

## குளிசை விக்கி குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

மூளாய்ப் பகுதியில் காய்ச்சலுக்குள்ளான மூன்று வயது குழந்தை ஒன்றுக்கு கொடுக்கப்பட்ட பரசிட்டமோல் குளிசை தொண்டையில் இறுக்கியதால் மூச்சுத்திணறி குழந்தை இறந்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

காய்ச்சலுக்குள்ளான இக் குழந்தைக்குதாயார்பரசிட்டமோல்குளிசை ஒன்றை (16ஆம் பக்கம் பார்க்க)

## சரத்தின் மனு மீதான விசாரணையை நிறுத்திவைக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தம்மை நாடாளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்குமாறு மேன்முறையீடுசெய்த விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகளை நிறுத்திவைக்க வேண்டுமென உயர் நீதிமன்றம்பணிப்புரை விடுத்துள்ளது.

இராணுவ நீதிமன்றம் அரசியலமைப்பின் பிரகாரம் ஒரு நீதிமன்றமாக ஏற்றுக்கொள்ள முடியுமா? இல்லையா? எனக்கருத்துரைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றத்தை கேட்டுக் கொண்ட நிலையிலேயே உயர்நீதிமன்றப் பிரதம நீதியரசர் அடங்கிய ஐந்து நீதியரசர்கள் குழு இப் பணிப்புரையை விடுத்துள்ளது. (ந-5,7)

## ஜே.வி.பி. மீதான தாக்குதல் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணித்தலைவர்கள் சிலர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தினால் கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

மக்களே நாட்டின் ஜனநாயகத்திற்காக ராஜபக்ஷவை தோற்கடிப்போம் போன்ற சுலோகங்களை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் முன்னணித் தலைவர் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-5)

## அரச காணியில் அத்துமீறி குடியேறியோரை வெளியேற்றுமாறு ஜனாதிபதி உத்தரவு!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரச காணிகளில் அத்துமீறி குடியேறியுள்ள மக்களை வெளியேற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமக்கு அறிவித்துள்ளார் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்கும் போது தடுப்பில் உள்ளவர்களை விடுவிக்குக - சிறிதரன் எம்.பி.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிப் பிரமாணத்தை முன்னிட்டு தடுப்பு முகாம்களிலுள்ள தமிழர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை முன்வைத்துள்ளார். அவ்வாறு தடுப்பு முகாம்களிலுள்ள தமிழர்களை விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு அவருக்கு கிட்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நெஞ்சைவிட்டு அகலா இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா மகேந்திரம்
தோற்றம்: 1967.10.19
மறைவு : 2008.10.24

மகேந்திரம் பிரதீபா
தோற்றம் : 1994.02.28
மறைவு : 2008.12.04

அன்பான உங்கள் மொழிகள் அகம் தன்னில்
என்றென்றும் ஒலிக்கிறது
உம்பிரிவால் எம் குடும்பம் தீராத வேதனையில் துடிக்கிறது
மாறாத சோகமது எம்மை வாட்ட ஆறாகக் கண்ணீர் பெருகுகிறது
காய்கள் கனியாகமுன் நீங்கள் காணாமல் போனதென்ன!
பூத்துக் குலுங்கிய றோஸ் பூக்களே உங்கள் முகங்கள் வாடியதேனோ?

*உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*

ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(2882)

## ஜனாதிபதி மகிந்தவின் பதவியேற்பு உரை சகல பாடசாலைகளிலும் ஒலிபரப்ப வேண்டும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிப் பிரமாண நிகழ்வுகளின் போது ஜனாதிபதியினால் ஆற்றப்படும் உரையை சகல பாடசாலைகளிலும் ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள பதவிப் பிரமாண நிகழ்வுகள் தொலைக்காட்சி மற்றும் வானொலிச் சேவைகளில் நேரடியாக ஒளி, ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளது.

கொழும்பு 1,2,3 மற்றும் 4 ஆகிய பிரதேச பாடசாலைகள் மட்டும் குறித்த தினத்தில் மூடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 9 ஆயிரத்து 744 பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் அதில் 4 இலட்சம் மாணவ மாணவியர் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மனைவியைக் கொன்றவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு

(கொழும்பு)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பஸ்நாயக்க நிலமே ஒருவருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

ரத்னபுரி சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே அன்டன் தென்னக்கோன் என்பவர் தனது மனைவியை படுகொலை செய்த குற்றத்திற்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

குறித்த நபர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும், அதன்போது ஜனாதிபதியின் உத்தரவு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்யாணி ஞானகந்த என்ற அவரது மனைவியை 2002-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ம் திகதி துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்துள்ளார். குறித்தநபருக்குஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியதுடன் அவரை விடுதலை செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை தற்போதைய மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவின் மனைவிக்கும் அண்மையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியிருந்தார். அவர் இரட்டை கொலை தொடர்பாக கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

செல்லா சினிமா (நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

## தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2011 ஆம் ஆண்டுக்கல்வியாண்டில் யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர தேசிய தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா HNDIT கற்கைநெறியினை கற்பதற்காக விண்ணப்பித்த மாணவர்களுக்கான தெரிவுப்பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த சகல மாணவர்களும் தமது தேசிய அடையாள அட்டையுடன் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனப் பதிவாளர் ந.உமாகாந் கேட்டுள்ளார். (ந)

## கடலில் மூழ்கி இளைஞன் மரணம்

பொலிகண்டி கடற்பரப்பில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த பத்மநாதன் துஸ்யந்தன் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கு மீனவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ந-24,7)

தத்துவ மஸி

சாமியே சரணம் ஐயப்பா



அகில இலங்கை யாழ் கோண்டாவில்

சபரீச ஐயப்ப தேவஸ்தானம் வருடாந்த மகரஜோதி மண்டல விரத மஹோற்சவ பெருவிழா

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விக்ருதி வருடம் கார்த்திகை மாதம் 1 - ம் நாள் (17.11.2010) புதன்கிழமை இன்று காலை புனித விரத மாலை அணிதல் கணபதி ஹோமத்துடன் மண்டல விரதம் ஆரம்பமாகும். தொடர்ந்து 60 தினங்கள் மகரஜோதிவரை காலை, மாலை விஷேட அபிஷேகம் பூசைகள், படிப்பூசைகள், பஜனைகள், மஹோற்சவம் ஏகதின லக்சநாமார்ச்சனை. விஷேட உற்சவங்கள் என்பன சிறப்பாக நடைபெற ஐயன் திருவருள் பாலித்திருக்கிறது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் விழாக்காலத்தில் வந்து தரிசித்து தங்களால் முடிந்த உதவிகள் வழங்கி ஐயனின் திருவருளை பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

விஷேட குறிப்பு : அடியார்கள் பால், தயிர், இளநீர், பூக்கள், பழவகை, நெய், கற்பூரம், மற்றும் அன்னதானம், சக்திபூஜை என்பவற்றிற்கு பொருளுதவி நிதியுதவி தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

T.P 021 222 7688 / 0777110629

இங்ஙனம்
தேவஸ்தானம் அறங்காவலர் குருசாமி
பிரம்மஸ்ரீ.கி.ஹரிஹரசுதசிவாச்சாரியார்.

அனைவரும் வருக! ஐயன் அருள் பெருக!!

மணி ஐயப்பா நகைப்பூங்கா
172/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0772735406

விளம்பர அனுசரணை

மணி ஐயப்பா நகைமாடம்
கந்தசாமி கோயில் முன்பாக
A 9 வீதி, கிளிநொச்சி.
0772735406

(ச-1636)

# இன்று ஒரு தகவல்

## எறும்பின் கர்வம்

ஒரு சமயம் இந்த உலகத்திலுள்ள எறும்புகளெல்லாம் சேர்ந்து ஒரு மாநாடு நடத்தியதாம்.

அதுதான் அகில உலக எறும்புகள் மாநாடு.

அதில் ஓர் எறும்புத் தொண்டர் பேசினார்:

"எறும்புச் சகோதரர்களே! சகோதரிகளே!

இந்த உலகத்தில் நமக்குப் பெரிய எதிரி எதுவென்று கேட்டால் அது யானைதான்.

நாமெல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்கேயாவது போய்க் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று ஒரு யானை வந்து நமக்கு மேல் காலை வைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன ஆகும்? ஆயிரக்கணக்கான நம் தோழர்கள் இறந்து விடுகின்றனர். இதைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும்" என்றார்.

அடுத்ததாக ஒரு எறும்புப் பிரதிநிதி பேச வந்தார். நாமெல்லோரும் சேர்ந்து நம்முடைய எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

அதன்பின் அந்த எறும்பெல்லாம் பல குழுக்களாகப் பிரிந்து ஆலோசனை நடத்தியது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அது எப்படியென்றால்...

அவர்களுக்குள்ளே ஒரு அகில உலகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது. அந்தத் தலைவர் கடவுளை வேண்டி தவம்செய்வது கடவுள் வந்ததும் அவரிடம் ஒருவரம் வாங்கி விடுவது. அதாவது நாம் யானைகளைக் கடித்தால் அது சாக வேண்டும் என்ற வரம்.

இதுதான் அவர்கள் செய்த முடிவு!

உடனே மாநாட்டில் அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

எல்லா எறும்புகளும் சேர்ந்து ஒரு தேர்தலை நடத்தின. ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்தன.

ஏகப்பட்ட போட்டிக்கு நடுவில் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவரானவுடன் அந்த எறும்புக்கு ஆணவம் வந்து விட்டது.

"எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான். கடவுளிடம் வரம் வாங்கிக் கொடுக்க வேண்டியது என்கடமை. எப்பேற்பட்டவரம் வாங்கப் போகிறேன் என்பதை கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள் என்றது.

நீண்டகாலம் தவம் செய்தது அந்தத் தலைவர் எறும்பு.

ஒருநாள் கடவுள் காட்சி கொடுத்தார்.

"எறும்பே... உன் தவத்தை மெச்சினேன். என்ன வேண்டும் கேள்!" என்றார்.

உடனே அந்த எறும்பு, "வேறொன்றுமில்லை. நான் கடித்தால் சாக வேண்டும். அவ்வளவுதான்!" என்றது.

"சரி, தந்தேன்!" என்று சொல்லிவிட்டார் கடவுள். வரம் வாங்கியாயிற்று.

இந்த எறும்புக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்கிறதா என்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமே! என்ன செய்வது... யாரைக் கடிக்கலாம் என்று யோசித்தது.

எதிரில் வரம் கொடுத்த கடவுள்தான் நின்று கொண்டிருந்தார்.

'அதுதான் வரம் வாங்கியாயிற்றே.. இனிமேல் இவர் என்னத்துக்கு என்று யோசித்தது! உடனே அவரையே கடித்தது.

அவர் உடனே பட்டென்று கையால் ஒரு தட்டுத் தட்டினார்.

எறும்பு 'அப்பாடா' என்று கத்திக் கொண்டே சுருண்டு விழுந்து விட்டது. வலிதாங்க முடியவில்லை.

என்ன இது? வரம் பலிக்கவில்லையே... நீங்கள் சாக வேண்டாமா? இப்பொழுது நானல்லவா இறந்து விடுவேன் போலிருக்கிறது. "என்று எறும்பு தரையிலிருந்தபடியே கேட்டது. கடவுள் சிரித்துக் கொண்டே சொன்னார்:

"நீ என்ன வரம் கேட்டாய்? நான் கடித்தால் சாகவேண்டும் என்று வரம் கேட்டாய். கொடுத்து விட்டேன். இப்பொழுது நீ கடித்தாய். சாகப் போகிறாய்" என்றார்.

இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்க வேண்டும்?"

'நான் கடித்தால் நான் யாரைக் கடிக்கிறேனோ அவர்கள் சாக வேண்டும் என்றல்லவா கேட்டிருக்க வேண்டும். ஏன் அது அப்படிகேக்கவில்லை தெரியுமா?

ஆணவம்! ஆணவம் வந்தால் அறிவு மழுங்கிவிடும். அதனால் அவசரத்தில் அப்படிக் கேட்டு மாட்டிக் கொண்டது. நமக்கும் அப்படித்தான்:.. ஆணவம் வந்து விட்டால்... அறிவு சரியாக வேலை செய்யாது

ஓரிடத்தில் எறும்புகளெல்லாம் வரிசையாக போய்க்கொண்டு இருந்ததாம். அந்த வழியாக ஒரு ஆண் யானையும் ஒரு பெண் யானையும் வந்திருக்கிறது.

எறும்புகள் குறுக்கே போவதைப் பார்த்ததும் பெண்யானை நின்று விட்டது.

ஆண்யானையைப் பார்த்து...." நீங்கள் கொஞ்சம் நில்லுங்கள்" என்றது. "ஏன் நிற்கச் சொல்கிறாய்?" என்று கேட்டது அது.

"பாவம் எறும்புகள். அதெல்லாம் போகட்டும். தவறுதலாக நாம் மிதித்துவிடக்கூடாது அல்லவா!" என்றது பெண் யானை.

"சரி, வா... அந்தப் பக்கமாக விலகிப் போய்விடுவோம் என்று சொல்லி ஆண்யானை, பெண்யானையை அழைத்துக் கொண்டு வேறு பக்கமாக ஒதுங்கிப் போனது.

இதைப் பார்த்துவிட்டு, ஊர்ந்து போய்க்கொண்டிருந்த எறும்புகளில் ஒன்று இன்னொரு எறும்பிடம் சொல்லியதாம்.

"பார்த்தாயா? நாம் கடித்து விடுவோம் என்று பயந்து கொண்டு அந்த இரண்டு யானையும் விலகி ஓடிக்கொண்டிருக்கு" என்றதாம்.

அதற்கு இன்னொரு எறும்பு, " பாவம்! யானைகள் பிழைத்துப் போகட்டும்... விட்டுவிடு" என்றதாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிராமஅபிவிருத்தி அமைப்பின் காரியாலயத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம அபிவிருத்தி அமைப்பின் காரியாலய திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன்வடக்கு, நாச்சிமார் கோயிலடியில் புன்னாலைக்கட்டுவன் கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் இ.விஸ்ணுரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் கிளை பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ந.மோகனேஸ்வரன்,யாழ். மாவட்ட செயலக மீளெழுச்சித் திட்டப் பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான ஏ.விசுவலிங்கம், சா.சுதர்சன், வலி.தெற்கு பிரதேச செயலாளர் திருமதி.சு.மஞ்சுளாதேவி, வலி. தெற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி.த.முருகநேசன், வலி. தெற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.சிவகுமார், புன்னாலைக்கட்டு வன் வடக்கு ஜே/208 கிராம சேவை யாளர் சோ. பரமநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# குறுந்தகவல் மூலம் குடிநீர் கட்டணத்தை செலுத்தலாம்

## புதிய திட்டம் அறிமுகம்

குடிநீர் கட்டணத்தை குறுந்தகவல் மூலம் செலுத்தும் புதிய திட்டம் ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தொலைபேசியினூடாக குறுந்தகவல் அனுப்புவதன் மூலமாக நீர் வழங்கல் கட்டணம் செலுத்தும் முறையொன்றை நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு அறிமுகப்படுத்தியுள் ளது.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவி ஏற்பு நிகழ்வை முன்னிட்டு நேற்று முன்தினம் முதல் இந்தப் புதிய முறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கூறியுள்ளது.

மேலும் நீர் கட்டணம் செலுத்துவதை இலகுபடுத்தும் நோக்குடன் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*17.11.2010*

*(கார்த்திகை 01, புதன்கிழமை)*

*ஏகாதசி முன்னிரவு 7.09 மணிவரை*

*உத்தரட்டாதி பின்னிரவு 2.52 மணிவரை*

*இராகுகாலம் 12.08-1.38 மணிவரை*

*சுபநேரம் 4.38-6.08 மணிவரை*

*ஹஜ்ஜுப் பெருநாள்.*

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடிய நேரம் பணிபுரிய நேரிடலாம், சயன சுகக் குறைவுண்டு, சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பொருளாதார நிலை உயரும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், தொல்லை கொடுத்தவர்கள் மனம் மாறி தொழில் வளர்ச்சிக்கு உதவுவர், அரசு வழி அனுகூலமுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கிடைக்குமோ கிடைக்காதோவென நினைத்த பொருள் எளிதில் கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினை விலகும்.

**சிங்கம்** எதிர்பாராத வகையில் வீண் பிரச்சினைகள் ஏற்படலாம், உடல் நலனில் கூடிய அக்கறை எடுக்கவேண்டியேற்படலாம், வாகன பழுது பார்த்தல் செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், களஸ்திர வழி நன்மையுண்டு, அபூர்வ சந்திப்புண்டு.

**துலாம்** நன்மைகள் நடைபெறும் நாள், பிள்ளைகளால் சிறு வருமானங்கள் உண்டு, அயலவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் குறைவடையும், வெளியூர்த் தொடர்பு விரிவடையும்.

**விருச்சிகம்** சொத்துக்களால் இலாபமுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும், சுபச் செலவுகள் வந்து சேரும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோஷம் ஏற்படும், சகோதரர் வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், உத்தியோகத்தில் எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், சுவாரஸ்யமான நிலையுண்டு, தொழிலில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்** பயணங்களால் பலன் கிடைக்கும், கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும்.

**மீனம்** பக்குவமாக நடந்து கொண்டு பாராட்டுப் பெறும் நாள், பயணமொன்றில் திடீர் மாற்றங்களைச் செய்யும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தினரிடையே முன் கோபத்தைக் குறைப்பது நல்லது.

வளவன்

# கொழும்புத்துறை மக்கள் விரைவில் சொந்த இடத்தில் மீள்குடியேற்றப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

கொழும்புத்துறையிலிருந்து இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் அவரைச் சந்தித்த மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து அமைச்சர் இவ்வாறு உறுதியளித்தார்.

மேலும் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்காக மக்கள் பிரதிநிதிகளும் கிராம சேவையாளர்களும் பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.


இதன்போது அந்தப் பகுதியில் மிதிவெடி அபாயம் இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்ய வேண்டும் எனவும் அதன் பின்னரே மக்கள் குடியேற அனுமதியளிக்க முடியும் என்றும் மிதிவெடி செயற்பாட்டு பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை அடுத்தாண்டு ஜனவரி மாதம் அம்மக்கள் மீள் குடியேற முடியுமென்றும் அதற்கேற்ற விதத்தில் தமது பணிகளை முன்னெடுக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புதுறையிலுள்ள எழிலூர், உதயபுரம், புனிதபுரம், மகேந்திரபுரம் மற்றும் பாசையூர் கடற்கரைப்பகுதி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மேற்படி மக்கள் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்து இற்றை வரை உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 |
| தக்காளி | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 60 | 70 |
| கரட் | 60 | 80 |
| பூசணி | 50 | 40 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 |
| பாகற்காய் | 140 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 |
| பயற்றங்காய் | 90 | 120 |
| லீக்ஸ் | 120 | 130 |
| பீற்றூட் | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 200 |
| போஞ்சி | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 |




வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன் உரையாற்றுவதையும் மற்றும் உதைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனாகிய தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவர்களையும் கரப்பந்தாட்ட போட்டியில் சம்பியனாகிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)

## மகரஜோதிப் பெருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தான வருடாந்த மகரஜோதி மண்டல நாள் விரத மஹோற்சவ பெருவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு ஐயப்ப அடியார்கள் அனைவருக்கும் விரத மாலை அணிவித்தலுடன் ஐயப்ப சுவாமிக்கு விஷேட அபிஷேகம் நிறைவுற்றதும் பகல் 12 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

இதில் அடியார்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு குருசாமி அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## கலந்துரையாடல்

(அல்வாய்)

சட்ட விடயங்கள் சம்பந்தமான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று சட்ட உதவி ஆணைக்குழுவினால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

அறிவிக்கப்பட்டோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படியும் மதிய உணவும் உதவு தொகையும் வழங்கப்படுமெனவும் யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்தி மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் உடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பதிவு செய்யப்படாத சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளலாம் என தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். (ஸ்ரீ-29)




## வடமராட்சி கிழக்கு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் மீள் குடியமர்ந்த வத்திராயன், உடுத்துறை, செம்பியன் பற்று கிழக்கு போன்ற பகுதி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் முகமாக நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கப்பட்டதுஅதே போல் உழுந்து, பயறு, சோளம், கௌப்பி, எள்ளு, நிலக்கடலை, குரக்கன் போன்ற விவசாய தானிய உள்ளீடுகள் விசாய திணைக்களத்தினால் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் கடந்த 9 ஆம் திகதி மக்களின் பங்களிப்புடன் தேவைப்பகுப்பாய்வு ஒன்று விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கற் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. இதனூடாக இவர்களுக்கான கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டதுடன் இவர்களது வாழ்வு மேம்படும் என அம்பன் பிரிவு விவசாய போதனாசிரியர் ஆ.சிவபாதம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-52)

## ஐயப்பவிரத மண்டல பூசையும் 18 படி திருவிளக்குப் பூசையும்

ஸ்ரீமலையின் ஐயனார் ஆலய ஐயப்ப விரதமண்டல பூசையும் 18 படி திருவிளக்குப் பூசையும் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 27ஆம் திகதி வரை தொடர்ந்து 41 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் இன்று காலை 9 மணிக்கு அஷ்டோஸ்திர சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்கு அபிஷேகமும் ஐயப்ப விரத சுவாமிகள் மாலை அணிதல், 18 படி திருவிளக்குப் பூசை, தீபாரதனை, பஜனை ஆகியன இடம் பெறவுள்ளது.

மேலும் 40 நாட்கள் மாலை 2 மணி தொடக்கம் அபிஷேகம், 18 படி திருவிளக்குப் பூசையும் தீபாராதனைகளும் பஜனையும் நடைபெறும்.நிறைவு தினமான 41ஆம் நாள் அன்று காலை அஷ்டோஸ்திர சங்காபிஷேகம் 18 படி திருவிளக்குப் பூசையும் இடம்பெறும் என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## பொன்விழா சைவ மாநாடு

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா சைவ மாநாடு இன்று புதன்கிழமை காலை 8 .30 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சைவ நாதம் எனும் பொன் விழா மலர் வெளியீடு செய்யப்படவுள்ளது. இதன் அறிமுக உரையை யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா. வேதநாதன் நிகழ்த்தவுள்ளார். சைவப் பணியாற்றுவோர் கௌரவிப்பும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-51)

## மாகாணமட்ட 3 ஆம் தவணை பரீட்சைத் திகதியில் மாற்றம்

(அல்வாய்)

தரம் 9,10 மாகாண மட்ட மூன்றாம் தவணைப் பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகள் நாளை முதல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது எனினும் இன்று இஸ்லாமிய சகோதரர்களின் ஹஜ்ஜுப்பெருநாள் இடம் பெறவுள்ளதால் இஸ்லாமிய சகோதரர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளை நடைபெறவிருந்த தரம் 9 இன் முதன் மொழிபாடத்திற்கும் தரம் 11 இன் முதன் மொழி பகுதி I,II, IIIஆகிய பாடத்திற்கும் உரிய பரீட்சைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மாற்றத்தினை சகல வலய பாட சாலைகளுக்கும் அறியத் தரும்படி வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## மதிப்பளித்தல் நிகழ்வு

(அல்வாய்)

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலய மதிப்பளித்தல் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு சின்னத்தம்பி மண்டபத்தில் வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி கமலாம்பாள் பஞ்சலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.பரிசில்களை திருமதி சுசிகலா திருவாகரன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-19)

## சிறுவர் தின விழா

கொழும்புத்துறை றொசாறியன் சிறுவர் தின விழா இன்று புதன்கிழமை பி.3.30 மணிக்கு புனித செபமாலை அன்னை மண்டபத்தில் சிறுவர் கழகப் பொறுப்பாளர் செல்வி ஜோ.ஜெவின் மஜித்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகள் கலந்துசிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக ஜெசாக் நிறுவனத்தில் இருந்து திருமதி ரஜீவ்யூனிஸ் கலந்து கொள்ளவுள்ளார்.அத்துடன் சிறுவர்களின்கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-51)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

அகவொளி உயர்கல்வி நிறுவனம் அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகத்துடன் (NUIG) இணைந்து நடத்தும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 10.30 மணிக்கு யாழ்.செ‌ன்.பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவெளி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேற்படி பல்கலைக்கழகத்தின் கல்விச் செயலாளர் டாக்டர் சீமஸ் மக்மதுனா கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ)

## 11 ஆவது நினைவு தின அஞ்சலிக் கூட்டம்

(வல்வெட்டித்துறை)

கடந்த 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி உயிரியல் ஆய்வுக்காக சென்று மரணமடைந்த நான்கு மாணவர்களின் 11 ஆவது நினைவு அஞ்சலிக் கூட்டம் ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை வியாழக்கிமை பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நினைவு நாளை முன்னிட்டு அயல் மற்றும் தமது பாடசாலைகளைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வும் அத்துடன் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-63)

## அறிக்கை சமர்ப்பிக்கவும்

(அல்வாய்)

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பூரணப்படுத்தப்படாத மற்றும் தளபாடங்கள் விரயங்கள் வழங்கப்படாத உட்கட்டுமான வேலைகள் தொடர்பான விபரங்களை அறிக்கை மூலம் தயாரித்து நிதி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் பா. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

(அல்வாய்)

பாடசாலை தர உறுதிப்பாடு தொடர்பான அறிக்கையை தத்தம் வலயங்களில் இருந்து பெற்று உள்ளக , வெளியக மேற்பார் வைகள் தொடர்பான அறிக்கையினை இன்று நடைபெறவுள்ள நிதி ஆணைக் குழுவின் கூட்டம் முடிவடைந்தபின் மாலை 2 மணிமுதல் 4 மணி வரை காட்சிப்படுத்த வேண்டும் எனவும்

அக்கூட்டத்திற்கு வன் , மென் பிரதிகளை கொண்டு வரும்படி வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப,விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## இரண்டாம் கட்ட உர விநியோகம்

(உடுப்பிட்டி)

புலோலி கமநல திணைக்களத்தினால் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட உர விநியோகம் வழங்கபட்டு வருகிறது.

புலோலி கமநல பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு கடந்த 10 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரையும் இவ்வுர விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.அம்பன் கமநல பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு கடந்த 15 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 22 ஆம்திகதி வரையும் வழங்கப் படும்.

அத்துடன் முதலாம் கட்ட உரத்தினை பெறாத விவசாயிகள் அதனை இரண்டாம் கட்டத்துடன் சேர்த்து பெற்றுக் கொள்ளலாம் என விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் கோகுலன் தெரிவித்தார். பரப்புக்கு 2 கிலோ வீதம் உரம் வழங்கப்படுகின்றது குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-52)









பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கும் கண்காட்சியும் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா மங்கள விளக்கேற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் வீரகுமாரதிஸாநாயக்க,அமைச்சின் செயலாளர் எம்.சிவஞானஜோதி,இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செயலாளர் மன்னப்பெருமாள் ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் கண்காட்சியினை பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். படங்கள்:-எஸ்.கரன்)

# அமைச்சின் அனுமதியின்றி சிறைகளில் பொலிசார் சோதனையிடக்கூடாது

## சிறைச்சாலை புனரமைப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சின் அனுமதியின்றி சிறைச்சாலைகளில் பொலிஸார் சோதனையில் ஈடுபடக்கூடாது என சிறைச்சாலைகள் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

நீதிமன்றின் உத்தரவு கிடைக்கப் பெற்றாலும் அமைச்சிற்கு முன் அறிவித்தல் விடுக்காது சோதனை நடத்தப்படக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் வெல்ல வாய சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் இக்குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 4 ஆயிரம் கைதிகள் தண்டனை அனுபவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளுக்கு பிரவேசிக்கும் சிறைச்சாலை ஆணையாளர் உள்ளிட்ட சகல உத்தியோகத்தர்களும் சோதனைக்கு உட் படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் இடையில் ஒத்துழைப்பு காணப்பட்டால் இவ்வாறான மோதல்களை தவிர்க்க முடியும் என அவர் கூறினார்.

இதேவேளை வெலிக்கடைச் சிறைச்சாலையைச் சேர்ந்த பெண் கைதிகளை சோதனை நடத்திய பொலிசார் பெண் உத்தியோகத்தர்களை தாக்கியுள்ளதுடன் இதில் மூன்று கைதிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவில் போதைப்பொருள் சோதனை நடத்த உத்தியோகத்தர்கள் முயற்சித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி சட்ட மூலங்களை உயர் நீதிமன்றம் அங்கீகரிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சீர்திருத்தம் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச்சட்டமூலம் ஆகியன அரசியல் அமைப்புக்கு ஏற்புடையது என உயர் நீதிமன்றம் நாடாளுமன்ற சபாநாயகருக்கு அறிவித்துள்ளது.

இதனை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இந்த திருத்தச்சட்டமூலங்கள் அரசியல் அமைப்புக்கு ஏற்புடையதா? என அறிவதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட 11 அமைப்புகள் உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருந்தன.

வடக்கு மாகாணசபை இயங்காத நிலையில் அந்த சபையின் இணக்கமின்றி இந்த சட்டமூலங்களை நிறைவேற்ற முடியாது என்ற காரணத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்திருந்தது. (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
16.11.2010 நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு
விழாவில் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா
(HNDM) பட்டத்தைப் பெற்ற

**அரங்கனா பத்மநாதன்**

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று
நல்வாழ்வு வாழ மனமுவந்து பாராட்டுக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருநெல்வேலி.

அண்ணன்மார்
(ராஜன், அச்சுதன்)

(சி-1634)



## கற்கோவளம் அருள்மிகு ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன நிறைவு விழா- (15.11.2010)









இவ்விழாவை முன்னிட்டு V.அருள்யோதியின் இசைநிலை இசை நிகழ்வு ஓய்வு பெற்ற அதிகாரி S.தவசிலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இசை நிகழ்வில் அருள்யோதி, ராதிகா, திருவருட்செல்வி, நவநீதன் ஆகியோரின் இசைச் சங்கமமும் S.கார்த்திகாயினியின் பரதநாட்டிய நிகழ்வும் நடைபெற்றது.

ஆலய நிர்வாகத்தினர்.

(சி-1635)

# அன்புநெறி நின்று அருள்ஒளி பரப்பிய அருட்கவி.சீ.விநாசித்தம்பி ஐயா



அன்பு மிகுந்தவர் அரனடி நினைப்பர்
இன்பமே அன்றி இடையூறு காணார்
ஆதி பரம்பொருள் ஆண்டவன் அவன்
புகழ்
ஓதி உணர்வர் உத்தமர் ஆவர்

- அருட்கவி-

அன்பு நெறி நின்று அருள் ஒளி பரப்பி அடியார்களுக்கு அறநெறி காட்டிய ஆன்மீக ஞானி சமாதிப் பேறடைந்து இன்று ஐந்து ஆண்டுகள் நிறைவுறுகின்றது. இந்நாளில் அம்மகானின் அடிகளைப் போற்றி அமைதி பெறுவோமாக.

-அடியார்-

# முஸ்லிம் தலைவர்களினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்க முடியாது

## அமைச்சர் மில்ரோய் தெரிவிப்பு

முஸ்லிம் தலைவர்களினால் சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் வெளியேற்றப்பட்ட வடக்கு இடம்பெயர்முஸ்லிம்களை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாக முஸ்லிம் தலைவர்கள் குற்றம் சுமத்தி வருவதாகவும் இந்தக் குற்ற ச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இடம்பெயர் முஸ்லிம் மக்கள் நிராகரிக் கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவர் நிறுவனத்திடம் முஸ்லிம் தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் இடம்பெயாந்த முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்பெற வில்லை என அண்மையில் அமைச்சர் ரிசாட் பதியுதினும் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது. கடந்த 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு மட்டுமே நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த 1990ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்திடம் ஏற் கனவே கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நாம் இலங்கையர் அமைப்பு மீதான தாக்குதலுக்கு த.தே.வி.கூ. கண்டனம்

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் ஜே.வி.பி.யின் ஆதரவுடன் நாம் இலங்கையர் என்ற அமைப்பினரால் நடாத்தப்பட்ட் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் விபரங்களை வெளியிடுமாறும் காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறும் கையெழுத்து இயக்கமும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்ற பொழுது எதிராக நடாத்தப்பட்ட கல் வீச்சு, முட்டைவீச்சு போன்ற தாக்குதல்களையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனின் இல்லத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி உட்பட ஜே.வி.பியினர் மீது நடாத்தப்பட்ட அரச பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போகச் செய்யப்பட்ட அரச பயங்கரவாதத்திற்கும் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்களைப் பலியெடுத்த அரசாங்கத்தின் போரைத் தூண்டி, ஆதரித்த ஜே.வி.பி இன்று தமிழ் மக்களுக்காகப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும், தடுப்புக் காவலில் உள்ளவர்களின் பெயர் விபரங்களை வெளியிட வேண்டும் என்ற ஜே.வி.பியின் கோரிக்கையை நாம் வரவேற்கிறோம்.

கடந்த 1971 ஆம் ஆண்டும்,1989 ஆம் ஆண்டும் தென்னிலங்கையில் நடைபெற்ற ஜே.வி.பி கிளர்ச்சிகளில் பங்குபற்றிய அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப் பட்டமையைப் போல சகல தமிழ் அரசியல், போர் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி தொடர்ந்து நிலவுவதன் எதிரொலிகளையே இச்சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

எனவே, வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் ,இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவும் தென்னிலங்கையில் உள்ள சகல முற்போக்குக் கட்சிகளும் தமிழர்களுடன் இணைந்து குரல் கொடுத்துப் போராடுவதுன் மூலமே இலங்கையில் சர்வாதிகார ஆட்சி பலமடையாமல் தடுக்க முடியும்.

தமிழ் மக்களுடைய சுயாட்சி உரிமையை ஜே.வி.பி உட்பட தென்னிலங்கை மக்கள் அங்கீகரிப்பதன் மூலமே நாட்டில் இன நல்லிணக்கத்தினையும், அமைதியையும் நிலை நாட்ட முடியும் என்பதனை சுட்டிக் காட்ட விரும்புகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பரிசளிப்பு விழா

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைப் பொது நூலகத்தினரால் மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சரசாலை பொது நூலகத்தில் நடைபெறவுள் ளது.


சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் வே. சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்ளவுள் ளார்.

நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-29)

# ஆசியாவிலேயே மிக வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இலங்கையுள்ளது

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)



ஆசியாவிலேயே மிக வேகமாக அபி விருத்தி அடைந்து வரும் நாடாக இலங்கை இருப்பதாக வீடமைப்பு மற்றும் பொது சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரி வித்துள்ளார்.

கண்டி சிட்டி சென்டர் நிலையத்தில் இடம் பெற்ற தேசிய உணவுகளைப் பிரபல்யப் படுத்தும் கண்காட்சியின் இறுதி நாள் நிகழ் வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரி வித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த விமல், எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தின் போது தேசிய உற்பத்திகளை ஊக்குவிக்கும் விதத் தில் பல பிரேரணைகள் முன் வைக்கப்பட வுள் ளதாகக் கூறினார்.

அத்துடன் இன்றைய இலங்கைக்கும் முன்னைய இலங்கைக்கும் இடையே வித்தி யாசம் உள்ளது. இன்று நாம் வாழும் நாடு ஒரு புதிய நாடு. பல வருடங்களாக எம்மை வாட்டிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த பின் உருவாக்கப்பட்டுள்ள அமைதியான நாடு இதுவாகும்.

இவ்வாறான பண்புகளைக் கொண்ட ஒரு நாட்டில் வாழும் குடிமக்களுக்கு பல கடமை கள் உண்டு. தேசியஉணர்வுகளுடன் கூடிய தேசிய உற்பத்தியை அதிகரிக்கும் அரச திட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

கோதுமை மா இல்லாவிட்டால் எம்மால் வாழ முடியாது என்ற கோட்பாட்டை சிலர் முன் வைக்கின்றனர். ஆனால் இது ஒரு மனோநிலையாகும். தற்போது எமது பேக்கரி களில் அரிசி மாவை பாவித்து பாண் தயாரிப் பதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே அரிசி மாவை கோதுமை மா போன்று மெது மையாக மாற்றக்கூடிய மத்திய நிலையங்க ளை நாம் ஆரம்பித்துள்ளோம். எனவே வெகு விரைவில் அரிசி மா பேக்கரிகள் இயங்க ஆரம்பிக்கப்படும்.

இலங்கையில் உண்மையான தேசிய நோக்குள்ள அரசாங்கமே தற்போது உள்ளது. நாட்டின் அனைத்து துறையிலும் தேசியத் துவத்தை முன்னெடுக்க வேண்டும். விவசாயத்துறையில் இரசாயன பசளை பாவிப் பதையும் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மத்திய மாகாண விவசாய அமைச்சர் நிமல் பியதிஸ்ஸ ஆகியோரும் இங்கு உரை நிகழ்த்தினர். (ஸ்ரீ-2)


# 2ஆம் மாத நினைவலைகள்...

தோற்றம் -18.08.1956

மறைவு -19.09.2010

அமரர் சந்திரசேகரம் பவானிதேவி




துன்பம் வரும் வேளை
எமக்குப் பலம் தந்தீர்
அன்பின் மொழி
என்ன வென்று புரியச் செய்தீர்
நாம் எண்ணும் மொழி யாவினிலும்
உம்மை நிறுத்தி
எங்கு தான் சென்றீரோ?
ஒளி விடும் தீபமாய்
எம் இதயம் எங்கும்
இடம் பிடித்தீர்
எண்ணுகின்றோம் தினம் தினம்
எம் முன்னே வருவீரோ?


கம்பஸ் லேன்,
திருநெல்வேலி. [ச-1633]


குடும்பத்தினர்.

# கைரேகையின் அமைப்பும் அதன் பலன்களும்


சென்றவாரத் தொடர்ச்சி...



படம் -7



படம் -8


படம் -9

| எண் ரேகையின் அமைப்பு | பலன்கள் |
|---|---|
| 7.சந்திர மேட்டில் தொடங்கி சூரிய மேடுவரை செல்லும். | திருமணத்திற்கு பிறகு பெயர், புகழ், செல்வம், செல்வாக்கு அனைத்தும் கிடைக்கும்வாய்ப்புஉண்டு. இவர்கள் உணர்ச்சி பூர்வமாக செயல்படக் கூடியவர்கள். ஆடம்பரத்தையும் எல்லோரும் பாராட்டக்கூடிய வெளித் தோற்றத்தையும் விரும்புபவர்கள். |
| 8.மணிக்கட்டு ரேகைகளில் தொடங்கி, சூரிய மேட்டை அடையும் நீண்ட ரேகை. இதுவும் ஒரு சிலரது கையில் அபூர்வமாகஅமையக் கூடியது. | இது ஆயுள் ரேகை, புத்தி ரேகை ,இருதய ரேகை போன்ற மற்ற ரேகைகளை வெட்டிக் கொண்டு செல்லும். அளவிட முடியாத செல்வம், அதிகாரம் போன்றவை கிடைக்கச் செய்யும். உலகப் பிரசித்தி பெற்ற தொழிலதிபர்கள், உலகின் பெரும் பணக்காரர்கள், வெற்றிகரமான கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு இந்த ரேகை இருக்கும். செல்வங்களும் புகழும் நிறைய இருந்தும் இவர்கள் தெய்வ பக்தியோடும் ஓரளவு எளிமையோடும் தர்ம சிந்தையோடும் வாழத் தெரிந்தவர்கள். |
| 9.இராகு மேட்டில் இருந்து சூரிய மேட்டுக்குச் செல்லும் ரேகை. | வெற்றியும் தோல்வியும், ஏற்றத்தாழ்வுகளும் மாறி, மாறி வரும் அமைப்பு . இது ஒரு காலகட்டத்தில் செல்வமும்,புகழும் இருக்கும். மற்றொரு காலகட்டத்தில்,நஷ்டங்களும்,இழப்புகளும் , புகழுக்கு பாதகமும் ஏற்படும்வாய்ப்புஉண்டு. ஆனால், இவர் கள் இதை சாமர்த்திய மாகச் சமாளிக்கக் கூடியவர்கள். |


படம் -10


படம் -11


படம் -12

| எண் ரேகையின் அமைப்பு | பலன்கள் |
|---|---|
| 10.கேது மேட்டில் இருந்து சூரிய மேட்டை அடையும் ரேகை. | அறிவும் ஆற்றலும் மிக்கவர்கள். சுதந்திரமாக செயற்படும் சுய முயற்சியாளர்கள். படிப்படியாக முன்னேறி போதுமான புகழையும் செல்வத்தையும் அடையக் கூடியவர்கள். |
| 11. உள்ளங்கையின் நடுப்பாகத்தில்தொடங்கிசூரிய மேட்டை அடையும் ரேகை. | அதிஷ்டமும், திடீர் செல்வமும் ,புகழும் வர வாய்ப்பு உண்டு. செல்வமும் செல்வாக்கும் உள்ள வாழ்க்கை அமையும். |
| 12. புதமேட்டில் தொடங்கி சூரிய மேட்டை அடையும் ரேகை | புகழ் பெற்ற நடிகர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் இத்தகைய ரேகையை உடையவர்களாய் இருப்பர். கலையிலும் செல்வத்திலும், செல்வாக்கிலும் இவர்கள் எவருக்கும் நிகரற்றவர்களாய் இருப்பவர்கள். |

மேலே குறிப்பிட்ட 12 வகை சூரிய ரேகைக ளும் தெளிவில்லாமல் இருந்தாலும் ஒரு சில குறுக்குக் கோடுகளால் அறுபட்டாலும் கிடைத்த புகழுக்கு பங்கம் ஏற்படலாம். அவமானம் உண்டாகலாம். தவறான வகையில் புகழ் தேடலாம். சேர்த்த செல்வமும் நிலைக்காமல் நீங்கி விடலாம். இது சூரிய ரேகையில் உள்ள தோஷத்தை குறிக்கும். (தொடரும்)

ஜோதிடக் களம்

## 2020 இல் நாட்டில் மும்மொழி சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டை இலக்கு வைத்து இந்நாட்டில் மும்மொழி பேசும் சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் எஸ். பி.நரவின்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சமூக நல்லிணக்கத்திற்கு முதன்மைக் காரணியாக அமைவது மொழியாகும். சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு மொழியறிவு விருத்தி செய்யப்படுவதோடு, மொழியைக் கற்பதற்கு ஊக்கப்படுத்துவதும் இன்றைய தேவையாகவுள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டு, இந்நாட்டில் வாழ்கின்ற சிங்கள,தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே சரியான புரிந்துணர்வையையும் சமூக ஒற்றுமையையும் ஏற்படுத்தும் முகமாக எதிர்வரும் 2020 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு மும்மொழி சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை மட்டத்தில் இவ் வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ஆயிரம் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தரம் 6முதல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கான செயற்றிட்டங்கள் கல்வியமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஜனாதிபதி விசேட செயலணி ஸ்தாபிக்கப்பட்டு,இந்நாட்டில் 3 மொழிகளும் பேசக்கூடிய சமுதாயத்தை உருவாக்கி, அதன் மூலம் சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வையும் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன. (ஸ்ரீ-2)

## பல்கலைக்கழக மாணவர்கள் பிரபஞ்ச கல்விமான்களாக உருவெடுக்க வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் நாட்டினுள் சிறந்த கல்விமானாக வருவதை விட உலகை வெற்றி கொள்ளக்கூடிய பிரபஞ்ச கல்விமானாக உருவாகுவதை காண்பதே தமது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வில பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

புத்திஜீவிகளுக்கு விலங்கு மாட்டிய யுகம் நிறைவடைந்த நிலையில் நாட்டின் கல்விமான்களுக்கு முன்னோக்கிச் செல்லக்கூடிய வழியமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை மாணவர்களுக்கும் மற்றும் விரிவுரையாளர் தமக்கு விருப்பமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## ஆண்டிறுதிப்பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன

(கொழும்பு)

அரச பாடசாலைகளின் ஆண்டு இறுதி தவணைப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. நேற்று ஆரம்பமாகி 19ஆம் திகதி வரை நடைபெறவிருந்த தவணைப் பரீட்சைகள் 22ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதியின் இரண்டாவது பதவி ஏற்பு வைபவம் பிரமாண்டமான முறையில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளதால் அன்றைய தினம் போக்குவரத்து பிரச்சினைகள் ஏற்படலாம்.ஆதலால் அன்றைய தினம் சில பிரதேச பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே தவணைப் பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை




(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

**சிந்தித்தால் வெற்றி வரும்! சீக்கிரத்தில் மாற்றம் வரும்!**

**எல்லோரிடத்திலும் நல்லவர் என்று பெயர் எடுத்துக் கொள்ளும் மீன இராசி நேயர்களே!**

உங்கள் இராசிநாதனான குரு இப்பொழுது உங்கள் இராசியிலேயே பலம் பெறப்போகிறார். எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் குரு சஞ்சரிக்கப்போவதால் நடுக்கமோ, கலக்கமோ கொள்ள வேண்டாம். நாம் நமது வீட்டில் இருக்கும் பொழுது செளகரியமாக இருப்பதைப் போல, கிரகங்களும் அதனதன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது அந்தந்த இராசிக்காரர்களுக்கு அபரிமிதமான பலன்களை அள்ளி வழங்கும்.

அதிலும் குருவை இராசிநாதனாகப் பெற்ற நீங்கள்,பூர்வ புண்ணியம் செய்தவர்கள். சொந்த வீட்டில் குரு சஞ்சரிக்கும் பொழுது, சுகங்களையும்,சந்தோஷங் களையும் நிச்சயமாக கொடுக்க வேண்டும். அதிலும் அவர் பத்தாமிடத்திற்கு அதிபதியாக அல்லவா? விளங்குகிறார். எனவே , முத்தான வாழ்க்கையில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளை அகற்றும் முகமலர்ச்சியோடு செயற்படுவீர்கள்.

புத்தாடை ,அணிகலன்கள் ஏராளமாக வந்து சேரும். புயல் வீசிய வாழ்க்கையில் இனி தென்றல் வீசும் . மத்தளம் ,நாதஸ்வரம் , முழங்கும் மங்கல ஓசை இல்லத்தில் கேட்கும் , எத்தகைய நிலையில் இருந்தாலும் , இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு எதிர் காலத்திற்கான அடித்தளத்தை அமைத்துத் தராமல் போகாது.

நமது ஊருக்கு சான்றோர்கள் ,அமைச்சர்கள் வரும்பொழுது சுவரொட்டிகள் அடித்து வரவேற்புக் கொடுப்போம். நமது இல்லத்திற்கு விருந்தினர்கள் வந்தால் ,வாயிலில் நின்று வரவேற்பு கொடுப்போம். நமது இல்லத்திற்கு விருந்தினர்கள் வந்தால் வாயிலில் நின்று வரவேற்பு கொடுப்போம். அதே போல , உங்கள் இராசிநாதன் உங்கள் இராசிக்கு வரும் பொழுதும் வரவேற்பு கொடுக்க வேண்டும்.

எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 10.54 மணிக்கு உங்கள் இராசிக்குள் குரு அடியெடுத்து வைக்க போவதால் ,அன்று மாலையே நீங்கள் ஆலயத் திற்குச் சென்று சுண்டல் நைவேத்யம் செய்து மஞ்சள் வஸ்திரம் அணி வித்து முல்லைப்பூ மாலை சூட்டி ,அபிஷேக ஆராதனைகள் செய்து , சந்நிதியில் குரு கவசம்பாடி ,கொண்டாடி மகிழுங்கள். குரு பார்வை உங்கள் மீது பதிந்தால் குருவருளோடு, திருவருளும் சிறப்பான வாழ்க்கையும் கிடைக்கும்.

குரு உங்கள் இராசியைப் பார்க்கவில்லை. ஆனால் , குரு உங்கள் இராசியில் சஞ்சரிக்கிறது. அதன் பார்வை 5 ,7 ,ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அதன் பார்வை பதியும் இடங்களெல்லாம் புனிதமடையும் அல்லவா. அது ஜென்ம இராசியில் இருந்து கொண்டு பார்ப்பதால் உங்கள் இராசிக்கே முழுப் பலனும் கிடைக்கப்போகிறது.

சுமார் 5 1/2 மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு திடீர் வீடு மாற்றம் , ஊர் மாற்றம்,இடமாற்றங்களை ஒரு சிலருக்குக் கொடுக்கலாம். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வது நன்மை தான் என்றாலும் மீண்டும் மறு மாற்றங்கள மேடத்திற்கு வரும் பொழுது ஏற்படலாம்.

எனவே தெசாபுத்தியின் பலமறிந்து வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். இருப்பினும் விரய வியாழன் மாறியதால் விரயங்கள் குறையும். வெற்றிச் செய்தி வீடு வந்து சேரும். அரை, குறையாக நின்ற பணிகளைத் தொடர்வீர்கள். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் வந்து சேரும். உல்லாசப்பயணங்கள் அதிகரிக்கும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கையும் கூடும். நல்லவர்களின் தொடர்பால் தொழில் வளர்ச்சி காண்பீர்கள்.

**நீங்கள் போய்ச் சேர்ந்த இடத்திற்கு நன்மை!**

எந்தக் காரியத்தையும் நீங்கள் யோசித்துச் செய்வதால் தான் யோகங்கள் வந்து சேர்கின்றன. உங்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளப் பலரும் முன்வருவர். பார்ப்பதற்கு சாதுவாக இருக்கும் நீங்கள் சகல விடயங்களையும் தெரிந்து வைத்திருப்பீர்கள். உங்களை யாராலும் ஏமாற்ற முடியாது என் றாலும் , உறவினர்களை நம்பி ஒரு சில சமயங்களில் ஏமாந்து விட்டு, மாட்டிக் கொண்டு விட்டோமே என்று பின் கவலைப் படுவீர்கள்.தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தெய்வத் திருப்பணிகளுக்கு நன்றாகச் செலவிடுவீர்கள்.

நம்பிக்கைக்குப் பாத்திரமாக ஒரு சிலரை மட்டுமே வைத்துக்கொண்டு ,அவர்களிடம் உங்கள் இரகசியங்கள் அனைத்தையும் சொல்லி விடுவீர்கள். வாழ்வின் ஒவ்வொரு அங்குலம் முன்னேறும் பொழுதும் ,அனைத்தும் இறையருளால்தான் என்பதை மற் றவர்களுக்கு எடுத்துரைப்பீர்கள்.

உங்கள் இராசி நாதனுக்கு சுக்ரன் பகைவன் என்பதால் குடும்பப் பிரச்சினைகள் கூடுதலாகவே இருக்கும். திருமணப் பொருத்தம் தித்திப்பாக இருந்தால் தான் வாழ்க்கை ஒளிமயமாக அமையும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படி இருக்கப்போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம். மற்ற இராசிக்காரர்களுக்கு ஜென்ம குரு நல்ல பலன்களை வழங்காது .ஆனால் உங்கள் இராசிக்கும் விருச்சிக இராசிக்கும் மட்டும் ஜென்ம குரு சிறப்புகளை வழங்கும்.

*ஜென்மத்தில் குருதான் வந்தால்*
*சிறப்பான வாழ்க்கை சேரும்!*
*பொன் பொருள் வந்து கூடும்!*
*புகழும் தான் அதிகரிக்கும்!*
*இன்பத்தைக் குடும்பத்தார்கள் இயல்பாக பகிர்ந்து கொள்வார்!*
*அன்போடு குருவைப் பார்க்க*
*ஆலயம் நோக்கிச் செல்வீர்!*

என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஜென்ம குரு உங்களை பொறுத்தவரை சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.செல்வ நிலையும் உயர்த்திக்காட்டும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குரு பார்க்க கோடி நன்மை என்பது முன்னோர் வாக்கு .அந்த அடிப்படையில் குரு உங்கள் இராசிக்கு 5,7,9 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் வாழ்க்கைத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். மாற்றக் கருத்துடையோர் மனம் மாறுவர். குறிப்பாக பூர்வ புண்ணியத்தின் பலனால் உங்களுக்கு என்னென்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவை எல்லாம் இந்த 5 1/2 மாதத்தில் கிடைக்கப்போகிறது.

மக்கள் போற்றும் அளவிற்கும் செல்வாக்கும், மகத்தான பதவி வாய்ப்புக்களும் கூட ஒருசிலருக்கு கிடைக்கலாம். குறிப்பாக முன்னோர் சொத்துக்களில் முறையான பலன்கள் கிடைக்கும்: பொன்னும், பொருளும், போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகும். பிள்ளைகள் வழியில் ஏற்பாடு செய்த திருமண முயற்சி கைகூடும் .அவர்களுக்கு தகுந்த வேலைக்கிடைத்து வரும். வருமானத்தை உங்களுக்கு உதிரி வருமானமாகக் கொண்டு வந்து கொடுப்பர்.

உங்கள் குணமறிந்து குழந்தைகள் நடக்கவில்லையே என்ற கவலை இனி மாறும். அவர்கள் எடுத்த முடிவை மாற்றிக்கொண்டு உங்கள் நோக்கத்திற்காக தாங்கள் கீழ் படிந்து நடப்பதாக ஒப்புக்கொள்வார். இட மாற்றங்கள் இனிய மாற்றங்களாகும். சப்தம பார்வையாக குரு பார்ப்பதால் சுபகாரியங்கள் இக் காலத்தில் ஏராளமாக நடைபெறும். கல்யாணங்கள் மட்டுமில்லாமல் பவளவிழா, முத்து விழா, மணி விழா போன்ற மகத்தான விழாக்களையும், பெண்களின் பூப்புனித நீராட்டு விழாக்களையும் கண்டு மகிழ்வீர்கள்.

இல்லத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குண்டுமணி அளவு கூடத் தங்கம் இல்லையே , குழந்தைகளுக்கு நகை வாங்க வேண்டும் என்று நினைத்த உங்களுக்கு எதிர்பாராத விதத்தில் தொகைகள் வந்து ஆபரணங்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

எதிரிகள் விலகி உதிரிகளாவர். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். பொது நலத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்குப் புதிய பதவிகளும் பொறுப்புகளும் வந்து சேரும். அருளாளர்களின் ஆலோசனைகளை அடிக்கடி கேட்டு நடந்து கொண்டால் பொருள்வளம் பெருக வழி பிறக்கும். பொன்னான எதிர் காலமும் உருவாகும். மண்,பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறி உங்கள் வீட்டுத் தேவைகளைப்பூர்த்தி செய்வர். உடன்பிறப்புக்கள் முதல் உறவினர் வரை பகையாக இருந்தவர்கள் இனிப் பாசம் காட்டுவர்.

ஒன்பதாம் இடத்தை குரு பார்ப்பதால் ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைக்கும். ஆன்மீகத்திற்காக அதிக தொகையைச் செலவிடுவீர்கள். தந்தைவழி ஆதரவு பெருகும். பங்காளிகளின் பகை மாறும். தூரத்து உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். ஈர மனம் கொண்ட பலர் உங்களுக்கு உதவக் காத்திருப்பர். அயல் நாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும்.

### சிவல்புரி சிங்காரம்

புதிய வாகன யோகமும் பயணங்களால் பலனும் கிடைக்கும் நேரமிது. ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் நலன்கருதிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். வளர்ச்சி அதிகரிக்க சிறப்பு வழிபாடுகளை நீங்கள் மேற்கொள்வது ல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

சிறப்பான வாழ்க்கை அமைய முருகப் பெருமானையும் தட்சிணாமூர்த்தியையும் வழிபட்டு வாருங்கள்.

**மீன இராசிப் பெண்களுக்கு மிகப் பெரிய மாற்றம் வரும்!**

மீன இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரப்போகிறது. பணப்புழக்கம் அதிகரிக்கும்.

குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். ஆன்மீகப் பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் சீராக்கிக் கொள்வது நல்லது. கணவன் -மனையியரிடையே கனிவு கூடும். வாரிசுகள் உருவாகும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்குவர். சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால் சந்தோஷம் வந்து சேரும்.

(முற்றும்)

**அன்பு வாசகர்களே!**

**குருப்பெயர்ச்சிப் பலன்கள் இன்றுடன் நிறைவு பெறுவதால் நாளை வியாழக்கிழமை முதல் பிறந்த திகதிப் பலன்கள் தொடர்ந்து வெளிவரும் என்பதை அறியத் தருகின்றோம்.**



மாமனிதர் நடராஜா ரவிராஜின் நான்காவது ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற் பாட்டில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வரணி மாசேரி கிராம முன்னேற்றச்சங்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் விளக்கேற்றுவதையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மலர் வணக்கம் செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.





சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு அண்மையில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் திவ்விய ஜீவன மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி லக்ஸ்மன் வெற்றி பெற்ற வீரர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் வெற்றி பெற்ற வீரர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## ஏசியன் நிறுவன அனுசரணையுடன் அடுத்த வாரம் சிம்போசியம் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஏசியன் நிறுவனத்தின் அனுசரணையுடன் அடுத்த வாரம் 'சிம்போசியம்' கண்காட்சி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 11மணியளவில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் முதல்வர் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் 'சிம்போசியம்' கண்காட்சியில் எத்தொனிப் பொருளில், எவ்வாறான கருத்துக்களை எவ்வாறு உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் ஏசியன் நிறுவனப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், மாணவர் சபை உறுப்பினர்கள் மற்றும் மாநகர சபை நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2)

## 8கோடி ரூபா நிதிமோசடியில் ஈடுபட்ட இந்தியர் கைது

இந்தியர் ஒருவர் எட்டுக் கோடி ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கண்டிப் பிரதேச மக்களிடம் குறித்த இந்தியர் இவ்வாறு நிதி மோசடி செய்துள்ளார்.

பிரமிட் முறை மோசடி வர்த்தகத்தில் ஈடுபட்டதன் மூலம் இந்தப் பணம் திரட்டப்பட்டுள்ளதாகவும் மக்களின் பணத்தை மோசடி செய்த குறித்த நபர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மோசடியில் பணத்தை இழந்த சுமார் 25 பேர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொள்வதற்காக நபர்களிடம் 14 ஆயிரத்து 500 ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மொத்தமாக 5 ஆயிரம் பேரிடம் மோசடி செய்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளன. (ஸ்ரீ-2)

## சிறுவர் தின விழா

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிப் பிரமாணத்தை முன்னிட்டு குருநகர் தொடர்மாடி முன்பள்ளியில் யாழ். பிரதேச செயலக யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியினரால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சிறுவர் தின விழா நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-7)


## அறிவித்தல்

வழக்கு இல:- தத்துவம்/01/2010

யாழ்ப்பாணம், இல 56, சிவன் பண்ணை றோட் என்ற முகவரியில் வசித்து மடத்தடி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு என்ற முகவரியில் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அப்புத்துரை கைம்பெண் அமராவதி என்பவரின் மரணசாதனம் விட்டு இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக

-மரணமெய்தியவர்

அப்புத்துரை பத்மநாதன் இல 56, சிவன் பண்ணை றோட், யாழ்ப்பாணம் தற்போது தனது தத்துவகாரன் கோப்பாய் தெற்கு, கோப்பாய் கதிரவேலு ஜெயரத்தினம் மூலம்

- மனுதாரர்

இவ் வழக்கு மேற்குறித்த மனுதாரரினால் மேற்குறித்த மரணமடைந்தவரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம் மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால், யாராவது ஆட்சேபனை இருப்பின் இந் நீதிமன்றில் 2010னிஆம் ஆண்டு மார்கழி மாதம் 22 ஆம் திகதி இம் மன்றில் காலை 9.00 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

2010.09.14

வரைவு
கனகரத்தினம் அசோசியேட்ஸ்
மனுதாரரின்சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி
க.மகாலிங்கம்
பதிவாளர்.

(2877)





- 1292-ஜோன் பலியல் ஸ்கொட்லாந்தின் அரசன் ஆனான்.
- 1511- ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகியன பிரான்சுக்கு எதிராக அணி திரண்டன.
- 1558-இங்கிலாந்தின் முதலாம் மேரி இறக்க அவரது ஒன்றுவிட்ட சகோதரி முதலாம் எலிசபெத் அரசியானார்.
- 1796-பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை இத்தாலியில் ஆர்க்கோல் என்ற இடத்தில் தோற்கடித்தன.
- 1820-கப்டன் நத்தானியல் பால்மர் அண்டார்ட்டிக்காவை அடைந்த முதலாவது அமெரிக்கர் ஆனார். பால்மர் குடாநாட்டுக்கு இவரது நினைவாகப் பெயர் சூட்டப்பட்டது.
- 1831-ஈக்குவாடோர் மற்றும் வெனிசுவேலா ஆகியன பாரிய கொலம்பியாவில் இருந்து பிரிந்தன.
- 1869- எகிப்தில் சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.
- 1873-பெஸ்ட், பூடா மற்றும் ஓபுடா ஆகிய நகரங்கள் இணைக்கப்பட்ட புடாபெஸ்ட் நகரம் ஹங்கேரியின் தலை நகராக்கப்பட்டது.
- 1878-இத்தாலியின் முதலாம் உம்பேர்ட்டோ மீதான முதலாவது கொலை முயற்சி இடம்பெற்றது.
- 1903- ரஷ்யாவின் சமூக சனநாயக தொழிற்கட்சி போல்ஷெவிக் (பெரும்பான்மை) மேன்ஷெவிக் (சிறுபான்மை) என இரண்டாகப் பிளவுண்டது.
- 1918-யாழ்ப்பாணத்தில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். நிவாரண நிதியம் அமைக்கப்பட்டது.
- 1922- முன்னாள் ஒட்டோமான் பேரரசின் சுல்தான் ஆறாம் மெஹ்மெட் இத்தாலிக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1933-ஐக்கிய அமெரிக்க சோவியத் ஒன்றியத்தை அங்கீகரித்தது
- 1939-செக் நாட்டில் நாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து 9 மாணவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் வதைமுகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.
- 1968-அலெக்சாண்ட்ரொஸ் பனகோலிஸ் என்பவருக்கு கிரேக்க சர்வாதிகாரி ஜோர்ஸ் பப்படொபவுலொசைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1970-வியட்நாம் போர்: மைலாய் படுகொலை கள் தொடர்பாக அமெரிக்காவின் லெப் டினண்ட் வில்லியம் கலி விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.
- 1970-சோவியத்தின் லூனாக்கொட் 1 சந்திர னில் தரையிறங்கியது. தொலை வில் இருந்து இயக்கக்கூடிய ரோபோ ஒன்று வேறோர் உலகத்துக்கு அனுப்பப்பட் டது. இதுவே முதற் தடவை ஆகும்.
- 1970-டக்ளஸ் ஏங்கெல்பேர்ட் முதலாவது கணனி mouseக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1989-பனிப்போர்: செக்கோசிலவாக்கியாவில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் கலகம் அடக்கும் பொலிஸாரால் நசுக்கப்பட்டது. ஆனாலும் இந்நிகழ்வு பின்னர் டிசம்பர் 29இல் கம்யூனிச அரசைக் கவிழ்க்க ஆரம்பமாக அமைந்தது.
- 2003 ஆர்னோல்ட் ஸ்வார்ஸ்நேகர் கலிபோர்னியாவின் ஆளுநரானார்.


### பிறப்புக்கள்

- 1904-இசாமு நொகுச்சி, சிற்பக் கலைஞரும் கட்டடக் கலைஞரும் (இ.1988)
- 1909-சி.இலக்குவானார், தமிழறிஞர் (இ.1973)
- 1920-ஜெமினி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ.2005)
- 1927- கமில் சுவெலபில், செக் நாட்டுத் தமிழறிஞர் (இ.2009)

### இறப்புக்கள்

- 1558-இங்கிலாந்தின் அரசி முதலாம் மேரி (பி.1516)

**1950- 14ஆவது தலாய் லாமா டென்சின் கியாட்சோ தனது 15ஆவது வயதில் திபெத்தின் அரசுத் தலைவர் ஆனார்.**



# யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்

06

**கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்த்துறை கருத்தரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

ஆங்கிலக் கல்வியை ஆதரித்த யாழ்ப்பாணத்தில் அக் கல்வி முறைக்கு எதிராக அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

*"பிள்ளைகள் சம்பள மொன்றுபத் தாச்சுது*
*பிரசங்க மல்லாற் படிப்புக் கிடையாது*
*நல்வழி சேர்க்கவோ காசுதான் சேர்க்கவோ*
*நானறி யேனடி ஞானப் பெண்ணே!*

......................

*அநியாயம் தானிப்போ பாதிரிமார் சேர்ந்து*
*அள்ளுகிறார் காசு ஞானப் பெண்ணே!..."*

(உ்த்.லக்ஷணக் கும்மி)

கிறிஸ்தவக் கல்விக்கு எதிராக இப்படிப் பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமூகச் சீர்திருத்த மொழி நோக்கிலே அரை வாய்மொழிப் பாடல்களைப் பாடிய பலர், நவீன போக்குகளைக் கண்டிப்பதிலே அதிக கவனம் செலுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மண்டைதீவு அகிலேஸ்வரசர்மா, துன்னாலை ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளை, கல்லடி வேலுப்பிள்ளை முதலானவர்களின் பாடல்கள் பெரும்பாலும் சிறுசிறு அச்சுப்பிரதிகளாக வெளிவந்தன. அவற்றை வாசித்து மகிழ்ந்தவர்களை விட விற்பனை செய்தவர்கள் பாடிக்காட்டியதைக் கேட்டு மகிழ்ந்தவர்களே அதிகம் எனலாம். அதனாலே தான் அவை இன்றும், வாய் மொழியாக வாழுகின்றன.

*"தாவணி பாவாடை எறிந்தார் - இப்போ*
*சல்லடையாம்சில்க்சைசில்நல்லுடைசெய்வார்.*
*பூமணவார் பௌடர் மணப்பார் - இவர்*
*புடைவைகட்டும் வேடிக்கையைப் புகலு*
*வேன் கேளும்*
*அழகான கூந்தலறுப்பார் - இதுவும்*
*ஐரோப்பிய நாகரிக ஆவேசமாம்*
*விழிவிஷேசத்துக்கும் உதவார் - இந்து*
*விதவைகளுங் கூடஇப்போ கூந்தலறுக்கார்"*

(நாகரிக வேடிக்கைப்பாக்கள்)

*"வாலிபரோடு குமரிகள் கூடி*
*மருவியிருந்து கடதாசி சொக்கட்டான்*
*ஆடலும் பந்து அடித்தலும் நீதியென்று*
*ஆர்சொல்லு வாரென்று பாருமடி"*

(அ.தி.அ.கு)

பெண்களின் நடையுடை பாவனைகளை வன்மையாகக் கண்டித்தமை போலவே இளைஞர்களின் பேக்குக்களையும் அரை வாய்மொழிப் பாடல்கள் கண்டித்துள்ளமையைக் காணமுடிகின்றது.

*"அஞ்சுவயசுடையஅகிர்ாணளவாம்பிளையள்*
*பிஞ்சில் பழுக்கிறார் ஐயா- அவர்*
*வந்து மதவடியில் குந்தியிருந்து கொண்டு*
*கலியாணமும் வேணுமாம்"*
*"மேலுதட்டில் ரண்டுஈ ஒட்டினாற் போல*
*மீசை விடுகிறார்கள்-அவர்*
*காலுக்குமேலே கால்போட்டுக் கொண்டு*
*கதைக்கிறாராம் இங்கிலீசு"*

(ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளை)

ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளையிற் பாடப்பட்ட இத்தகைய பாடல்கள் இன்றும் வடமராட்சிப் பகுதியிலே வழங்குகின்றன.

(தகவல்:ஆறுமுக உபாத்தியாயர் 1976)

சமூகச் செல்நெறியை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டிய இத்தகைய அரை வாய் மொழிப் பாடல்கள் காலவெள்ளத்தால் அள்ளுண்டு போனமை கவலை தருவதே

சமூகத்தைக் கண்டிக்கவும், நவநாகரிகத்தை நகையாடவும் பயன்படுத்தப்பட்ட அரை வாய்மொழிப் பாடல்கள் சமூகத்தை நன்னெறிப்படுத்தவும், வாழ்வியலை வளப்படுத்தவும் உதவின என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின் போது மக்கள் உணவு உற்பத்தியை அதிகரித்துச் சுய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கிலேயும் அரை வாய் மொழிப் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன.பனையின் பிரயோசனங்களைப் பயன் படுத்தலும், உள்ளூர் உணவுப் பொருள்களான மரவள்ளிக்கிழங்கு, சாமை, தினை, குரக்கன் முதலானவற்றைப் பயிரிடுதல் பற்றியும் பலபாடல்கள் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*"கப்பலு மிங்கே வரத்துக் கிடையாது.*
*காச்ப் புழக்கங்க ளில்லாத வூரிது*
*இப்படியான இடத்தி லிருந்து நாம்*
*என்ன செய்வோமடி ஞானப் பெண்ணே"*

(தகவல்: முருகேசு)


*"சுன்னாகச் சந்தையிலே*
*உன்னாணைச் சேதியக்கை*
*துடைமொத்தம் ஒருகிழங்கு"*

(தகவல்: கா. சிவத்தம்பி)

இத்தகைய பாடல்கள் சிறுசிறு நூல்களாகவோ, துண்டுப்பிரசுரமாகவோ அச்சடித்து வெளியிடப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் விடயங்களையும் அரை வாய் மொழிக் கவிஞர்கள் பெருமளவுக்குப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே, இன்று நமக்குக் கிடைத்துள்ள பண்ணைப் பாலக் கும்மி, உத்தியோக லக்ஷணக் கும்மி ஆகிய இரண்டும் மிகவும் முக்கியத்தும் பெறுகின்றன. உத்தியோக லக்ஷணக் கும்மி யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால ஆட்சி முறைகளைத் தெளிவாகக் குறிப்பிடுவதோடு, அக்காலத்துப் ***பெரிய மனுஷர்*** களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. உதாரணமாக,

*"பட்டமும்பெற்றொரு பாரியையுங் கொண்டு*
*பரிசுடன் முத்துக் கிட்டினரும் வந்தார்.*



*இட்டமாய் யாவரும்போய் மரியாதையோடு*
*இன்பு கொண்டாடினார் ஞானப்பேண்ணே!"*

(உ.லக்ஷ்.கும்)

பரிஸ்டர் பட்டம் பெற இங்கிலாந்துக்குச் சென்ற முத்துக் கிருஷ்ணர் அங்கேயே திருமணம் செய்து வெள்ளைக்கார மனைவியுடன் இங்கு வந்தமையை நையாண்டியாக இப்பாடல் சுட்டுகின்றது.

யாழ்ப்பாண அரசதிபராகப் பணியாற்றிய ***டைக்*** துரை பற்றி இக்கும்மிப்பாடல் பின் வருமாறு சுட்டுகின்றது.

**பேராசிரியர்**
**எஸ்.சிவலிங்கராஜா**

"பெற்ற பிதாவிடம் பிள்ளைகள் போய்த்தம்
பிரியங்கள் சொல்லிப் பெறுவதுபோல்
உற்றயாழ்ப்பாணச்சனத்துக்கெல்லாம்- நல்ல
உபகாரி தானவர் ஞானப்பெண்ணே!"

அக்காலத்து ஆட்சியாளர்கள் பலரைக் கண்டித்துப் பாடிய பல பாடல்களினூடே இத்தகைய பாராட்டுப் பாடல்களும் இல்லாமலில்லை.

(தொடரும்)

## யாழ். இளைஞர்கள் மூவர் பிரேசிலிலிருந்து நாடுகடத்தல்

(கொழும்பு)

யாழ்ப்பாண தமிழ் இளைஞர்கள் மூவர் பிரேசிலிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மூன்று இளைஞர்களும் பிரேசிலிலிருந்து ஈக்குவடோரிற்கு செல்ல முற்பட்ட போது பிரேசில் பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் செயற்பட்ட காரணத்தினால் குறித்த இளைஞர்களை கைது செய்ததாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் விமானம் ஊடாக குறித்த நபர்கள் ஈக்குவடோருக்கு செல்ல முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு கடத்தப்பட்ட மூவரும் நேற்று முன்தினம் இலங்கை திரும்பியுள்ளதாகவும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறித்த இளைஞர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாடு கடத்தப்பட்ட இந்த யாழ்ப்பாண தமிழ் இளைஞர்களின் பெயர் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றும் சிங்கள ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

## இலங்கைப் பணியாளர் சவுதி பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் ஒலேயாப் பகுதிப் பூங்காவொன்றில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர் தங்களால் அந்நாட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதரகம் குறிப்பிடுகிறது.

குறிப்பிட்ட பூங்காவில் தங்கியுள்ள இலங்கையர்கள் பற்றிய தவல்களை இலங்கையிலுள்ள ஊடகங்களுக்கு வழங்கியமைக்காகவே இந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகச் சவுதிக்கான இலங்கைத் தூதரகத்தின் தொழில் ஆலோசகர் அனுரமுத்துமால தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தூதுவரின் முன் அனுமதியின்றி அவர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்ட அவர் அவரை விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

## மகளிர் தினவிழா

யாழ். பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் மகளிர் தினவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நிலைய மண்டபத்தில் கொடியேற்றத்துடன் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வேதபாராயணம், ஓங்காரம், அஷ்டோத்திரம், விளக்குப் பூசை, மகளிர், இளைஞர் அணியினரின் இசை அமுதம் என்பவற்றோடு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளப்போவதில்லை

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிப் பிரமாண நிகழ்வுகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

பதவிப் பிரமாண நிகழ்வுகளின் போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் எவரும் கலந்து கொள்ளப் போவதில்லை என செயற்குழுக் கூட்டதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறி கொத்தாவில் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

தலைமைப் பொறுப்பு உள்ளிட்ட பதவிகள் கட்சியின்செயற்குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் பதவிகளுக்கான தெரிவின் போது மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற சஜித் பிரேமதாசவின் யோசனைத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் முக்கிய பதவி வெற்றிடங்களுக்கான தெரிவின் போது முரண்பாடு ஏற்பட்டால் வாக்கெடுப்பு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் இதில் கட்சித் தலைமை உள்ளிட்ட பதவிகள் குறித்து நிர்ணயிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 85 ஆவது அவதார தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 85 ஆவது அவதார தின் நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையிலுள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் பிரசாந்திக் கொடியேற்றத்துடன் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை நிலையத்தலைவர் ஸ்ரீ .ஆ. ஜெகநாதன் நிகழ்த்த சிறப்புரையை வட பிராந்திய சத்ய சாயி சோவா நிலைய இயக்குனரும் தலைவருமான ஸ்ரீ.இ. வசந்த சேனன் ஆற்றுவார்.

அத்துடன் பாலவிகாஸ் மாணவர்களின் "சாயி எங்கள் தெய்வம்" என்ற நடன,நாடக, காவடி, பேச்சு நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

(ஸ்ரீ-2)

# கொழும்பில் 3 நாட்களுக்கு புதிய போக்குவரத்துத் திட்டம்

(கொழும்பு)

நேற்று முதல் 3 தினங்களுக்கு கொழும்பு நகரில் விசேட போக்குவரத்துத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

காலை 9.30 மணிதொடக்கம் மதியம் 1.30 மணி வரை இந்த விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரிஷாந்த ஜயக்கொடி குறிப்பிட்டுள்ளார்.

காலி முகத்திடலினை அண்மித்த பகுதிகளில் இந்த நான்கு மணி நேர விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் காலி முகத் திடலில் இருந்து செரமிக் வீதி வரையிலான பகுதியிலும் காலி முகத் திடலினை அண்மித்த பகுதிகளிலும் இந்த விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. காலி வீதியூடாகப் பயணிக்கும் பேருந்துகள் உட்பட அனைத்துக் கனரக வாகனங்களும் கொள்ளுப்பிட்டிச் சந்தியில் வலதுபக்கமாகத் திரும்பிப் பித்தளைச் சந்தியூடாக கொழும்பிற்குள் பிரவேசிக்க முடியும்.

ஏனைய வாகனங்கள் அனைத்தும் காலி முகத்திடல் ஹோட்டல் சந்தியில் வலது புறமாகத் திரும்பி மார்க்கான் மார்க்கார் வீதியூடாகப் புறக்கோட்டையைச் சென்றடைய முடியுமெனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## மீண்டும் பன்றிகளின் தொல்லை

நீண்ட இடைவேளையின் பின் மீண்டும் பன்றிகளின் தொல்லை ஆரம்பித்துள்ளது.

உடுப்பிட்டி தொண்டைமானாறு பகுதி வயல்களில் பன்றிகள் கூட்டமாக வந்து மண்ணைக்கிளறி பயிர்களை அழித்து வருகின்றது.

அத்துடன் தோட்டக்கரைகளிலும் கேரைக் கிழங்குகளை தின்பதற்காக பரந்தளவில் மண்ணைக் கிண்டி உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-54)

# நாட்டிலுள்ள 9 மாகாணங்களிலும் காதலர் பூங்காக்கள் நிர்மாணம்

(கொழும்பு)

மாகாணம் தோறும் காதலர் பூங்காக்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கமைய, நாட்டிலுள்ள 9 மாகாணங்களிலும் இளம் காதலர்களுக்காக யூத் பார்க் எனும் பெயரில் காதலர் பூங்காக்கள் அமையப் பெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்.


இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 7 ஏக்கர் நிலப்பரப்பில் மேல்மாகாணத்திற்கான பூங்கா தியவன்ன ஓயா பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான முன்னோடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார். இடையூறு இல்லாத இடம் மேலும் இளம் காதலர்களுக்கு இல்லாததன் காரணமாக இத்தகைய பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் இப் பூங்காக்களில் கலைத்துறை சார்ந்த கலைஞர்களுக்கு இடமும் ஒதுக்கிக் கொடுக்கப்படவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் தவிசாளர் கூறியுள்ளார்.

இப்பூங்காங்களுக்கு வரும் இளம் காதலர்கள் எல்லை மீறி ஒழுக்கக் கேடாக நடக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை பேராதனை உட்பட பிரபல்யமான மூவினத்தவர்களில் காதலர்கள் ஒழக்கக் கேடான முறையில் நடந்து கொள்வதனால் இப்பூங்காக்களுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் முன்னர் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தினால் சிறுவர், முதியோர் தின விழா அண்மையில் யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினரான யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.கேசவன், சிறப்பு விருந்தினராக கடவுளின் குழந்தைகள் நிறுவனத் தலைவர் டாக்டர் பி.ஆனந்குமார் ஆகியோர் மன்றப்பணிப்பாளர் சி.குமாரலிங்கம் மற்றும் மன்றத் தலைவி திருமதி.ருக்மணி ஆனந்தவேல் ஆகியோரால் மண்டபத்துக்கு அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# முக அழகு, கூந்தலழகு, உடலழகு பெற்றிட மூலிகை பாவனை குறிப்புக்கள்

அழகுக்கலை இப்போது எல்லா நாடுகளிலும் புதுப்பொலிவுடன் வளர்ச்சி கண்டு வருகிறது. இருபாலாருக்கும் இப்போது நகரங்களில் அழகு நிலையங்கள் உருவாகி வருகின்றன. அழகுக்கலைக்கு அடிப்படை அழகு சாதனங்களே. தற்போது சோப், பவுடர், கிறீம்கள், உதட்டுச் சாயங்கள், தலைப்பூச்சு(Dye) போன்ற ஒப்பனைப் பொருட்கள் தற்காலத்தில் மக்கள் மத்தியில் பிரபல்யமாகி அதிகப்படியான பாவனைக்கு உள்ளாகி வருகின்றன. இவற்றில் இரசாயனப் பொருட்களே அதிகளவில் கலந்துள்ளன. இவை பலருக்கு ஒத்துக் கொள்வதில்லை. இதனாலேயே தற்போது மக்களின் பார்வை மூலிகையின் பக்கம் திரும்பியுள்ளது. காரணம் இயற்கையிலிருந்து கிடைக்கும் மூலிகைகள் எதுவித பக்கவிளைவுகளையும் அற்ற தன்மையைக் கொண்டது தான்.

எமது முன்னோர்கள் கூந்தல் தைலம், கண்மை, பற்பொடி, நகப்பூச்சு போன்றவற்றை மூலிகைகளிலிருந்து தயாரித்து வந்துள்ளனர். வாசனையூட்டப்பட்ட நீரில் குளிப்பது, குளித்த பின் மேனியெங்கும் வாசனை நறுமணப் பொருட்களைப் பூசிக் கொள்வது, குளிப்பதற்கு மூலிகைக் குளியல் பொடியைப் பயன்படுத்துவது, மூலிகைப் பொட்டு, மூலிகைக் கண்மை ஆகியவற்றைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் தான் என்னவோ அன்றைய மக்களுக்கு ஒவ்வாமையால் வரும் தோல் வியாதிகள், பொடுகுத் தொல்லை, செம்பட்டை மயிர், இளநரை, புழுவெட்டு, முகப்பரு வழுக்கைத் தலை ஆகியவற்றின் பாதிப்பின்றி ஆரோக்கியமாகவும் வசீகரமான தோற்றத்தையும் நீண்ட ஆயுளையும் பெற்று வந்துள்ளனர். ஆகவே இதனைக் கருத்திற்கொண்டு இயற்கை மூலிகை அழகுக் குறிப்புகள் நீங்களே இலகுவில் தயாரித்துக் கொள்ளக் கூடிய வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### பொடுகு நீங்கிட ஷம்பு பவுடர்

பொடுதலை -100g,வெந்தயம் -50g,

நிழலில் உலர்த்திய செவ்வரத்தம் பூ - 100g, உலர்ந்த புனலைப்பழம் - 50g, சிகைக்காய் - 100g

மேற்கூறிய எல்லாவற்றையும் நிழலில் உலர்த்திப் பொடித்துப் பத்திரப்படுத்தி வைக்கவும். தேவையான போது கூந்தலுக்குகேற்ப வழமையான சிகைக்காயைப் போன்ற அளவில் உபயோகித்து தலை முழுகவும்.

★ பொடுதலையை இடித்துச் சாறு எடுத்து 200ml சாறுக்கு 200ml நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி சாறு வற்றியதும் வடிகட்டி தலையில் பூசி வரவும்.

★ கொஞ்சம் யூக்கலிப்டஸ் தைலத்தை சூடு படுத்தி பொடுகுத் தலையில் தேய்த்து ஒரு டவலை கொதிநீரில் நனைத்துப் பிழிந்து தலையில் சுற்றிக் கட்டி விடவும். இப்படி சில நாட்கள் செய்ய பொடுகு மறையும்.

### பேன் ஒழிய

தற்போது பல்வேறு வகையான பேன் கொல்லி மருந்துகள் இருந்தாலும், அவற்றில் இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளதால் சிலருக்கு முடி கொட்டுதலையும் ஒவ்வாமையையும், அரிப்பையும் உண்டாக்க வாய்ப்புகள் உள்ளன.

★ துளசி இலைகளையோ, அமுக்கிரா இலைகளையோ அரைத்துத் தேய்த்துத் தலை முழுகி வர பேன்கள் இல்லாதொழியும்.

★ மருதாணிப் பூவை தலையில் அடிக்கடி வைத்துக் கொள்ள பேன் விலகும்.

★ தமிழ்மருந்துக் கடையில் கிடைக்கும் காட்டுச்சீரகத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து தலையில் பூசி ஒரு மணி நேரம் ஊறவிட்டு தலைமுழுகி வர பேன்கள் ஒழியும்.

★ சீதாப்பழம் (அன்னமுன்னா) வின்கரிய விதைகளை சேகரித்து உலர வைத்து பொடியாக்கி அதேயளவு சிகைக்காய் கலந்து இடித்துப் பொடித்து சுடுநீரில் கரைத்து அடி மயிரில் தேய்த்து முழுகி வர பேன் ஒழிவதுடன் கூந்தலும் பஞ்சு போல மென்மையாகும்.

★ மருதாணி விதை - 100g,வெந்தயம் - 50g, வசம்பு - 50g

இவற்றை ஒன்றிரண்டாக இடித்து 1l தேங்காயெண்ணெயில் போட்டுக் காய்ச்சி சிறிதளவு அன்றாடம் தலையில் தேய்த்து வர பேன் அடியோடு ஒழியும்.

### செம்பட்டை மறைய

★ நிலாவாரை இலையையும், மருதாணி இலையையும் பச்சையாக ஒவ்வொரு கைப்பிடி அளவு எடுத்து அடி மயிரில் பூசி ஒரு மணி நேரம் ஊறிய பின் தலை முழகி வர செம்பட்டை மறையும்.

★ எலுமிச்சங்காயளவு கறிவேப்பிலையை விழுதாக அரைத்து தேங்காயெண்ணெய் 250ml இல் காய்ச்சி வடிகட்டி தினமும் செம்பட்டைக்குத் தடவவும்.

★ ஒலிவ் எண்ணெயை செம்பட்டையில் தேய்த்து வர செம்பட்டையும் நீங்குவதுடன் முடி வரட்சி நீங்கும்.

★ மகிழம் பூ விதையையும், வெந்தயத்தையும் தேங்காயெண்ணெயில் ஊற வைத்து ஊறியவற்றை எடுத்துப் போட்டு விட்டு எண்ணெயை மட்டும் பூசி வர குணமாகும்.

★ மருதாணி இலைச்சாறு - 100ml, நெல்லிக்காய்ச்சாறு - 100ml, தேங்காயெண்ணெய் - 250ml இவைகளை ஒன்றாகக் கலந்து காய்ச்சி சாறு வற்றியதும் இறக்கி தினமும் தலையில் பூசி வர செம்பட்டை மாறும்.

### இளநரை நீங்க

★ வெள்ளைக் கரிசலாங்கண்ணி - 100g,கொட்டைக் கரத்தை இலை - 100g எடுத்து நன்றாக நிழலில் உலர்த்தித் தூள் செய்து உலர்த்தி காலை, மாலை தேனில் குழைத்து 48 நாட்கள் தொடர்ந்து உண்டு வர முடி கருமையாகும். 2 கிழமை விட்டு மீண்டும் பயன்படுத்தலாம்.

★ வெள்ளைக்கரிசாலைச் சாற்றையும், கடுக்காய் ஊறிய நீரையும் சமஅளவு கலந்துதலையில் தேய்த்து சிறிது நேரம் ஊறிய பின் தலை முழுகி வர முடி கருமை பெறும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.


★ அதிமதுரம், பசும்பால்,நெல்லிக்கனி இவை மூன்றையும் சமஅளவு கலந்து குடிநீராக்கி வடித்து அந்தக் குடிநீரளவு தேங்காயெண்ணெய் கலந்து நரைக்குப் பூச நிறம் கருமையாகும்.

★ நெல்லிக்காய்ச் சாற்றுடன் சமஅளவு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி இளநரைக்குத் தேய்த்து வர குணம் கிடைக்கும்.

★ பொன்னாங்காணிச்சாறு - 250ml கரிசலாங்கண்ணிச்சாறு - 250ml, மருதாணி இலைச்சாறு - 250ml, பசும்பால் - 250ml, தேங்காய்யெண்ணெய் - 1l, கடுக்காய் - 25g, நெல்லிக்காய் - 25g இவைகளை ஒன்றாகக் கலந்து காய்ச்சி எண்ணெயை வடித்து தலைக்குத் தேய்த்து வர நரை மாறும். (தொடரும்)

# அமைதிக்கான நோபல் பரிசு -2010

# சிவப்பு நாட்டின் எதிர்ப்புக் குரல்



இந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசுக்காக 237 பேர் பரிசீலிக்கப்பட்டனர். இதில் சீனாவின் லியூ சியாபோ, ஆப்கானிஸ்தானின் பெண் உரிமை வாதியான சீமா சமார், ரஷ்யாவின் மனித உரிமை ஆர்வலர் சுவைத்லேனா மற்றும் கன்னுஷ்கினா (இந்த இருவரும் பெண்கள்) ஆகிய மூன்று பேருக்குத்தான் அதிக வாய்ப்புகள் இருந்தன. இறுதியில் லியூ சியாபோ வெற்றி பெற்று விட்டார். அவருக்கு இவ்வாண்டு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

லியூ சியாபோ, 1955 ஆம் ஆண்டு சீனாவில் ஜிலியன் என்ற மாகாணத்தில், சாங்சுன் என்ற கிராமத்தில் பிறந்தார். 1976 இல் ஜிலின் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1982 ஆம் ஆண்டு இலக்கியத்தில் பட்டம் பெற்றார். பின்னர் பெய்ஜிங்கின் நார்மல் பல்கலைக்கழகத்தில் பயின்று, 1984 ஆம் ஆண்டு இலக்கியத்தில் முது நிலைப்பட்டத்தை பெற்றார். அதைத் தொடர்ந்து அந்தக் கல்லூரியிலேயே விரிவுரையாளராகவும் பணியில் சேர்ந்தார். பணியில் இருக்கும் போதே கலாநிதி பட்டத்தையும் பெற்றார்.

அந்தக் காலக்கட்டத்தில் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிசக் கொள்கைகளுக்கு எதிரானவர்கள் கிளர்ச்சிகளை நடத்தினர். அவற்றைக் குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் ஊக்குவித்து வந்தன. அதேபோல தானும் சீனாவின் கம்யூனிசக் கொள்கைகளுக்கு எதிராகப் போராடவேண்டும் என எண்ணி, சீன கம்யூனிச அரசுக்கு எதிராக மாணவர்களை கிளர்ந்தெழச் செய்தார்.. அதன் விளைவாக 1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சீனாவின் தியான்மென் சதுக்கத்தில் திரண்ட மாணவர்கள் "எங்களுக்கு பொதுவுடைமை கொள்கை வேண்டாம் அமெரிக்கா போன்று ஜனநாயக அரசு (முதலாளித்துவ கொள்கையை சார்ந்த அரசு) வேண்டுமென" ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சீன அரசு பேச்சுவார்த்தை நடத்திப் பார்த்தது. மாணவர்கள் தங்களின் ஜனநாயக கொள்கையில் பிடிப்புடன் இருந்தனர். "சாகும் வரை உண்ணாவிரம் இருப்போம்" எனக் கூறி அங்கேயே தங்கி இருந்தனர். அந்த நள்ளிரவில் சீன இராணுவம் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதில் நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டனர். உலக நாடுகளும் உலகெங்கிலும் உள்ள பொதுவுடைமைவாதிகளும் கூட இந்தச் செயலை வன்மையாக கண்டித்தனர். "கம்யூனிசத்தின் உன்னதமான கொள்கைகளை தெரியாமல் முதலாளித்துவ மோகத்துடன் மாணவர்கள் தான் இந்தச் செயலை செய்தார்கள் என்றால், அரசாங்கம் மாணவர்களிடம் அறிவுரை கூறி, கம்யூனிச் தத்துவத்தை எடுத்துக் கூறாமல் மாணவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது மிகப்பெரிய வரலாற்று தவறு" எனவும் கூறினார்.

இந்தப் போராட்டம் நடந்த போது, லியூ சியாபோ அமெரிக்காவில் இருந்தார். ஏராளமான மாணவர்கள் கொல்லப்பட்டதையடுத்து சீனாவுக்குத் திரும்பினார்.

அவரை சீன அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. போராட்டத்தைத் தூண்டியதாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது 1991ஆம் ஆண்டு ஜனவரி வரை சிறையிலேயே இருந்தார். பின்னர் விடுவிக்கப்பட்டார்.

வெளியே வந்த பின்னர் மீண்டும் ஜனநாயக கருத்துக்களை பரப்பத் தொடங்கினார். எனவே அவ்வப்போது வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். பின்னர், 1995 மே முதல் ஜனவரி வரை மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

அதன் பின்னர் அதே ஆண்டில் ஒக்டோபர் மாதம் மூன்றாவது முறையாக கைது செய்யப்பட்டார். இம்முறை சமுதாயத்தில் அமைதியைக் கெடுக்க முயன்றதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதற்கு மூன்று வருடம் சிறைத்தண்டணையும் வழங்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் 2008ஆம் ஆண்டில் 19 அம்சங்கள் அடங்கிய "உரிமைச் சாசனம்" ஒன்றைத் தயாரித்தார் இதற்கு "உரிமைச் சாசனம் 08" என்று பெயர். அதில் ஜனநாயக உரிமைகளையும் தனிமனிதச் சுதந்திரத்தையும் இனிமேலும் சீன அரசு தட்டிக் கழிக்க முடியாது என்றும் அவற்றை உடனே தருவது தான்நல்லது என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் "சீனாவில் பல சட்டங்கள் உள்ளன. ஆனால், சட்டத்தின் ஆட்சி இல்லை. இங்கு அரசியலமைப்பு உண்டு.ஆனால் அதன்படி செயற்படும் அரசு இல்லை" என்று அடுக்கடுக்கான குற்றங்களை சுமத்தினார்.

"சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத் துறை தனித்தனியே பிரிக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு சாசனப்படியே ஆட்சி இருக்க வேண்டும். எந்த ஒரு தனி நபரோ அல்லது தனிக்கட்சியோ(கம்யூனிசம்) ஆதிக்கம் செலுத்தக்கூடாது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு அமைய வேண்டும்" என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த சாசனத்தில் அறிவாளிகள், கல்வியாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என 350 க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டனர்.

இதுசெக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிசத்தை வீழ்த்த பயன்படுத்தப்பட்ட மனித உரிமை சாசனத்தை பின்பற்றி தயாரிக்கப்பட்டது. இந்தச்சாசனம் ஐ.நா. மனித உரிமை பிரகடனம் வெளியிடப்பட்ட அறுபதாவது ஆண்டு தினமான டிசம்பர் 10 ஆம் திகதி வெளியிடப்பட இருந்தது. ஆனால் டிசம்பர் 8 ஆம்திகதியே லியூ சியாபோவை சீன அரசு கைது செய்து விட்டது. விசாரணை துரிதமாக நடத்தப்பட்டு, டிசம்பர் 25 ஆம் திகதி தீர்ப்பு கூறப்பட்டது. அதுவும் பதினேழே நாட்களில் அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத்தண்டணையை தற்போதும் அனுபவித்து வருகிறார்.

"லியூ சியோபோ சீனாவில் அடிப்படை மனித உரிமைகளை கொண்டு வர அறவழியில் பல ஆண்டுகளாக போராடி வருகிறார். அதற்காக தான் இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசை வழங்குகிறோம்" என நோர்வே நோபல் குழு அறிவித்தது. இவ்விருது அறிவிக்கப்பட்டது அவருக்கு தெரியாது. இந்த தகவலை கூறி வாழ்த்து சொல்வதற்காக , அவரது மனைவி லியூசியா, சிறைக்குச் செல்ல முயன்றார். ஆனால் சீனஅரசு, அவரையும் கைது செய்து வீட்டுக்காவலில் வைத்து விட்டது. இந்தச் செயலுக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள் கடும் கண்டனத்தை தெரிவித்தன. ஆனால் சீனா புறந்தள்ளி விட்டது.

" லியூ சியோபோ ஒரு கிரிமினல் குற்றவாளி. அவருக்கு நோபல் பரிசு வழங்குவது சட்ட விரோதமானது. அதையும் மீறி வழங்கி விட்டு , ஆதரவு தெரிவிப்பது ஏற்கத்தக்கது அல்ல. இதை மேலைநாடுகள் எங்கள் மீது தொடுத்துள்ள கருத்து ரீதியான போராகவே பார்க்கிறோம். நாங்கள் பொருளாதார ரீதியாக மிக வேகமாக வளர்ந்து வருகிறோம். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மேலை நாடுகள், எங்களை சரணடைய வைக்கவே விரும்புகின்றன" என்று சீன அரசு கண்டனம் தெரிவித்தது.

இந்த நோபல் பரிசு வழங்கும் விழா டிசம் பர் 10 ஆம்திகதி நோர்வே தலைநகர் ஒஸ் லோவில் நடக்கிறது.

அதைப்பெற சீன அரசு அனுமதிக்குமா என்பது சந்தேகமே. இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில் கம்யூனிசத்திற்கு எதிரானவர்களை மனித உரிமை ஆர்வலராக அறிவித்து அவர்களுக்கு தொடர்ந்து நோபல் பரிசு வழங்கி வருவது நோபல் பரிசு வரலாற்றில் நிறையவே நடந்துள்ளது. இதைத் தான் மேற்கத்தைய முதலாளித்துவ ஜனநாயக நாடுகளும் விரும்புகின்றன. கம்யூனிச நாடுகளான சீனா, வியட்நாம் , வட கொரியா,கியூபா நாடுகள் மனித உரிமைகளை தொடர்ந்து மீறி வருவதாக அமெரிக்காவும் மேற்கத்தைய நாடுகளும் தொடர்ந்து புகார் கூறி வருகின்றன.

ஆனால், இலங்கை யில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமையான படுகொலைகளும் ஈரான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் அமெரிக்கா நடத்தி வரும் மனித உரிமை மீறல்களையும் படுகொலைகளையும் கண்டிப்பதில் இந்தியா உட்பட எந்த நாட்டுக்கும் மனதில்லை.

# விஜயகாந்த் வேண்டாம்; காங்கிரஸ் தான் வேண்டும்

## மனம் திறந்தார் ஜெயலலிதா



"இந்திய மத்திய அரசுக்கான ஆதரவை தி.மு.க.விலக்கிக்கொண்டால் எந்தவித நிபந்தனையும் இன்றி காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு ஆதரவைக்கொடுப்போம்" என்கிற ஜெயலலிதாவின் மனம் திறந்த பேட்டி இந்திய அரசியல் அரங்கில் பரபரப்பை உண்டாக்கி இருக்கிறது.

பல நாட்களுக்கு முன்பே ஜெயலலிதா சந்திப்புக்கு டைம்ஸ்நவ் செய்தியாளர்கள் நேரம் கேட்டிருந்த நிலையில்,திடீரென கடந்த 11ஆம் திகதி காலை வந்து விடும்படி முதல் நாள் மாலையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கூட மரியாதை நிமித்தமான சந்திப்புக்கான நேரம் என்றுதான் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் சனல்காரர் எதற்கும் தயாரான நிலையில் போயிருக்கிறார்கள். தன் பேட்டிக்கான டைரக்ராக ஜெயலலிதாவே மாறியிருக்கிறார். கமரா எங்கே வைக்க வேண்டும்... எந்த ஆங்கிலில் இருக்க வேண்டும் என்பது உட்பட எல்லாவற்றையும் அவரே தீர்மானித்திருக்கிறார். கூடவே ஜெயா ரீவியின் இரண்டு கமராக்களும் ஜெயலலிதா பேட்டியை சூட் செய்திருக்கின்றன. பேட்டிக்கான அறைக்கு ஜெயலலிதா வந்த போது அங்கிருந்த அனைவரையும் வெளியேறச் சொல்லி... அவர் வந்து அமர்ந்த பின்னர் செய்தியாளர்களை மீண்டும் அனுமதித்திருக்கிறார்கள். ஜெயலலிதா வரும் போது அந்த அறையில் யாரும் இருக்கக் கூடாது என்பது பொதுவாக நடைமுறையில் இருக்கும் விதி என்று அதற்கு காரணம் கூறியிருக்கிறார்கள்.

எப்போதும் ஒருவித இறுக்கத்துடனே இருக்கும் ஜெயலலிதா இந்த முறை பேட்டி எடுக்கச் சென்றவர்களிடம் ரொம்பவே நேருக்கம் காட்டி இருக்கிறார்.ஜெயாரீவி ஊழியர்களிடமும் இம் முகம் காட்டினாராம். பேட்டியைத் தொடங்கும் முன்பாகவே தன்னோடு பேசிய ரைம்ஸ்னவ் சனல் எடிட்டர் ஆர்னாப் போஸ்சுவாமியிடம்... தன்னைப் பற்றி அந்த சனலில் ஒளிபரப்பான செய்தி ஒன்றுக் கான எதிர்ப்பையும் அழுத்தமாக தெரிவிக்கிறார்.

தன்னிடம் கேட்கப்பட்ட 12 கேள்விகளுக்கும் தயக்கமோ,தடுமாற்றமோ இல்லாமல் பதில் கொடுத்திருக்கிறார். பேட்டி முழுக்க காங்கிரஸ் கட்சித்தலைமையின் கவனத்தை எப்படியாவது தன் பக்கம் திருப்பி விடவேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார்.

"ஆ.ராசா மீது நடவடிக்கை எடுத்தால் கூட்டணி ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று காங்கிரஸ் பயப்படுகிறது. ஆட்சிக்கவிழாமல் இருக்க தி.மு.க.வின் 18 எம்.பிக்கள் எண்ணிக்கையை சமன் செய்ய வேண்டும். எங்களிடம் ஒன்பது எம்.பிக்கள் இருக்கிறார்கள். ஒத்த கருத்துடைய மற்ற கட்சித் தலைவர்களிடம் நான் பேசியிருக்கிறேன். அந்தக்கட்சிகளின் எம்.பிக்கள் எண்ணிக்கையையும் சேர்த்தால் 18க்கு மேலும் ஒன்று இரண்டு கூடுதலாக இருப்பார்கள்" என்று வெளிப்படையாக ஜெயலலிதா சொன்னபோது பேட்டி எடுத்தவரே ஒரு நொடி அதிர்ந்தார்.

"நீங்கள் கூட்டணியை மாற்றி அமைப்பது குறித்து பேசுகிறீர்கள். அப்படி என்றால் காங்கிரஸை ஆதரிக்க நிபந்தனை எதையும் விதிப்பீர்களா?" என்று கேள்வி எழுப்பட, 'என்னுடைய தரப்பில் இருந்து எந்த நிபந்தனையும் இருக்காது' எனக் காங்கிரஸ் கட்சிக்கு உறுதி கொடுத்தார் ஜெயலலிதா. காங்கிரஸ் அரசு கவிழாமல் காக்கும் அள விற்கான எம்.பிக்கள் தன்னிடம் இருக்கிறார்கள் என்பதை ஒரு முறைக்கு இருமுறை அழுத்திச் சொன்ன ஜெயலலிதா ஒத்தகருத்துடைய கட்சிகள் பெயரை சொல்ல மறுத்துவிட்டார்.

மத்தியில் கூட்டணி பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். மாநில அளவிலும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணிக்கு தயாராக இருக்கிறீர்களா? என்று கேட்டால் அதைப்பற்றி காங்கிரஸ் தான் முடிபு செய்ய வேண்டும் என்றார்.

சோனியாகாந்தி குறித்த தன் விமர்சனங்களைத்தான் காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி வைப்பதில் சிக்கலாக இருக்கிறது என்பதால் அதிலும் சமரசம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதை வெளிப்படுத்தினார் ஜெயலலிதா. "அரசியலில் பழைய பிரச்சினைகளை மறக்காமல் பின்னோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தால் முன்னேறிச்செல்ல முடியாது. எனவே கடந்த காலங்களில் நடந்தவைகளை மறந்துவிட வேண்டும். எதிர் காலத்தை நோக்கி நகர வேண்டும்" என்று சோனியாவுக்கு தன் கருத்தை வெளிப்படுத்தினார் ஜெயலலிதா. இப்படி வெளிப்படையாக காங்கிரஸுக்கு மெசேஜ் கொடுத்திருக்கும் ஜெயலலிதாவின் மனநிலை என்ன என்பதை அறிய கடந்த ஒரு வாரத்தில் அவரை சந்தித்த சிலரிடம் பேசினோம்.

'ஜெயலலிதாவைப்பொறுத்தவரை காங்கிரஸ் கூட்டணி இருந்தால் மட்டுமே தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று நம்புகிறார். விஜயகாந்த் தரப்பில் இருந்து அதிகப்படியான எதிர்பார்ப்புகள் இருப்பதால் அவர்களை எதிர்பார்க்க வேண்டாம் என்கிற முடிபுக்கு வந்துவிட்டார் ஜெயலலிதா

கம்யூனிஸ்ட்டுகளும் நம்பிக்கையான கூட்டணி கட்சியாக இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறார். அதேபோல ம.தி.மு.கவின் ஒரு எம்.பியையும் 18 பேர் லிஸ்டில் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை அவர். காங்கிரஸ்கூட்டணிக்கு ஜெயலலிதாவை கொண்டு வர முயற்சிக்கும் அ.தி.மு.க. ஆதரவு காங்கிரஸ் தலைவர்கள் சிலரின் ஆலோசனைப்படியே இந்தப் போட்டியைக் கொடுத்தாராம்.

**நக்கீரன்**

சோனியாவுடன் சமரசம் செய்ய விரும்புவதையும் நிபந்தனையற்ற ஆதரவு என்பதையும் வெளிப்படையாக அறிவியுங்கள் என்று ஜெயலலிதாவின் டில்லி நண்பர்கள் கருத்தை தன் பேட்டியில் பிரதி பலித்து விட்டார்.

ஜெயலலிதாவைப் பொறுத்த வரை வரும் தேர்தலிலும் தோல்வி என்றால் பெரிய நெருக்கடி உருவாகும் என்று நினைக்கிறார். அந்த நிலையைத் தவிர்க்க கூட்டணி ஆட்சிக்கும் தயார் என தன் மன நிலையை வெளிப்படுத்தியிருக்கிறார். காங்கிரஸ் தன்னோடு வராவிட்டாலும் கூட்டணி ஆட்சிக்கு தி.மு.கவை நிர்ப்பந்திக்கும். அப்போது அவர்களுக்குள் பிரச்சினை வந்து தி.மு.க. -காங்கிரஸ் கூட்டணி உடையும் என்று நம்புகிறார். எல்லாவற்றையும் விட குருப்பெயர்ச்சி தனக்கு சாதகமான சூழலை உருவாக்கும் என்கிற நம்பிக்கையிலேயே இப்படி ஒரு பேட்டியை கொடுத்திருக்கிறார்" என்கிறார்கள் அந்த முக்கிய பிரமுகர்கள்.

உண்மையைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டுவிட்டு ஓடாமலிருப்பது தான் கடினம். - ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# 'வசம்பு' கரைத்துத் தெளித்தால் புற்றில் இருக்கும் பாம்பு வெளிவரும்

'எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்குமென்று யாருக்குத் தெரியும்' இது கிராமிய தமிழ்ப் பழமொழி. பழமொழியில் இருக்கக்கூடிய அர்த்தம் காத்திரமானது.

அப்படியானால் புற்றிலிருக்கும் பாம்பை எப்படி அறிவது? புற்றைவிட்டு வெளியே வரச் செய்வது தான் ஒரே முறை. அப்படியானால் புற்றிலிருந்து பாம்பை வெளியே வரவழைப்பது எங்ஙனம்?

மகுடி வாசிக்கலாம் என ஒரு சாரார் கூறுவர். இன்னொரு சாராரோ மண்ணெண்ணெய் ஊற்றலாம் என்பர். நிதானமாய்ச் சிந்திப்போர் வசம்பு கரைத்துத் தெளிப்பது நல்லது என்பர்.

மகுடி ஊதினால் பாம்பு வரும். வருகின்ற பாம்புக்கு ஏற்ப மகுடி ஊதவேண்டும். தாளம் தப்பினால் அரவம் தீண்டும் அபாயம் உண்டு.

மாறாக மண்ணெண்ணெய் பாம்புக்குத் தீரா எரிவைத் தரக்கூடியது. ஆகையால் பாம்புகள் புற்றிலேயே தங்கிவிடும்.

ஆக, வசம்பு மட்டுமே வெளியே வரவழைக்கவும், மீண்டும் புற்றில் குடியிருக்க தடை செய்வதற்கும் உதவக்கூடியது. ஆகையால் வசம்பை கரைத்துத் தெளிக்கலாம்.

அட! இந்த ஆலோசனையை யாரேனும் உம்மிடம் கேட்டார்களா என்று நீங்கள் நினைப்பதும் எங்களோடு இருக்கக்கூடிய பாம்புகளில் எவை விஷம், எது நல்லது, எவை பறக்கக்கூடியவை, எது தாவக்கூடியது, எது பாயக்கூடியது, எவை கடக்கவல்லவை, எந்தப்பாம்பு நடிக்கவல்லது, இவற்றைத் தெரியாமல் நாம் தத்தளிக்கின்றோம்.

நீர் ஐந்தறிவு பாம்புக்கதை அளக்கிறீர் என்று நீங்கள் கடுப்பிலிருப்பதும் தெரியாமலில்லை.

பரவாயில்லை எங்களோடு கூடவேயிருக்கின்ற பாம்புகளை இனம்காண்பதற்கும் வசம்பு இருக்கிறது.

ஆம், காணாமல் போனவர்களை மீட்டுத்தருவதாகக் கூறி அப்பாவித் தமிழ்மக்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைச் சூறையாடிய பாம்புகளை கண்டறிவது தற்போது இருக்கக்கூடிய பெரும் பணியாகும். இதற்கு நீதிவிசாரணை ஒன்றே வசம்பாகும்.

நல்லபாம்புகள் எவை? விஷப்பாம்புகள் யாவை என்பதை இனங்காணத் தவறினால், தமிழ் இனத்தின் எதிர்காலமும் வேதனைக்குரியதாகிவிடும்.

ஆகையால் நீதிவிசாரணை இடம்பெற வேண்டும். அந்த நீதிவிசாரணைக்கு பாம்புகள் விடப்போவதில்லை என்பதும் தெரிந்த விடயமே.

ஊழல் குற்றச்சாட்டுக்களெல்லாம் கட்சியை உடைக்கும் கதைகள். கட்சியை உடைத்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காமற் போகும் என்றெல்லாம் புராணம் பாடி விசாரணையிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிப்பர்.

ஆனால்விஷப்பாம்புகள்எம்மோடுகூடவேஇருக்கும் வரை எந்தத்தீர்வுக்கும் இடமில்லை என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

தவறினால் பாம்பின் விஷம் ஆலகால விஷத்திலும் கொடியதாய் மாறி தமிழின அரசியல் முழுவதிலும் அது வியாபித்துவிடும்.

ஆகையால் பகிரங்க நீதிவிசாரணைக்கு உட்படுத்துவதே பாம்புகளை அறிய ஒரேவழி.

# வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் புதிய இயக்குநர் சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் விசேட பொது கூட்டத்தில் புதிய இயக்குநர் சபைத் தெரிவு இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தலைவராக டாக்டர் சு. ஸ்ரீவிக்னேஸ்வரா, செயலாளராக சுதேச மருத்துவர் ஜெ. ஜெயசீலன், பொரு ளாளராக சுதேச மருத்துவர் சி.செல்வலிங்கம், உபதலைவராக சுதேச மருத்துவர்எ.ஸ்ரீநிவாசன்உபசெயலாளராக சுதேச மருத்துவர் சு. நிசாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவும் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்டத்திற்கு சி.ஸ்ரீபாலறஞ்சிதன், கிளிநொச்சி மாவட்டத்திற்குடாக்டர்திரிலோகமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்டத்திற்குடாக்டர்நேசதுரை, வவுனியா மாவட்டத்திற்கு டாக்டர் ந.சிவ ராதிரன், மன்னார் மாவட்டத்திற்கு டாக் டர்.யோகானந்தன், திருகோணமலை மாவட்டத்திற்கு டாக்டர் பரமானந்தம், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சுதேச மருத்துவர் சு.நிஷாந்தன், அம்பாறை மாவட்டத்திற்கு சுதேச மருத்துவர் திரு மதி. பாத்திமா றிசானா, கொழும்பு மாவ ட்டத்திற்கு சுதேச மருத்துவர் இ.பிரசாத் ஆகியோ ரும் தெரிவாகினர். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பில் அவசர விவாதம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம்தொடர்பில்அவசர விவாதமொன்று நடத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வரவு- செலவுத்திட்ட விவாதங்களின் போது அல்லது அதன் பின்னர் உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் நடத்தப்படவுள்ளது.

கட்சித் தலைவர்களினால் விவாதம் தொடர்பான தினம் நிர்ணயிக்கப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் தினத்தில் மேலதிக நேரத்தை எடுத்துக்கொண்டு சில வேளைகளில் விவாதம் நடத்தப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டம் தொடர்பான உச்ச நீதிமன்றின் பரிந்துரைகளை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இன்றைய அமர்வுகளின் போது சபாநாயகர் இதனை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

விருப்பம் தெரிவு மற்றும் தொகுதி வாரி அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த உத்தேச திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராக சில தரப்பினர் உச்ச நீதி மன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதென ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ள அதேவேளை ஜே.வி.பி.மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# நாடுகடந்த தமிழீழ அரசின் தேர்தலை இந்தியாவில் நடத்த இடமளிக்கப்படாது

## இந்தியா அறிவிப்பு

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பிலான தேர்தல்கள் எவையும் இந்தியாவில் நடத்தப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென இந்திய மத்திய அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா போன்ற நாடுகளில் தேர்தல் நடத்தி நிறுவப்பட்டதைப் போன்று இந்தியாவிலும் நாடுகடந்த அரசாங்கத்திற்கான தேர்தல் நடத்தப்படும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் ருத்திரகுமாரன் அண்மையில் அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் பேச்சாளர் ஒருவர் இவ்வாறான தேர்தல் எதனையும் இந்திய அரசாங்கம் நடத்தவிடப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளை கடந்த 1992ஆம் ஆண்டு தடை செய்ததுடன் யுத்தம் நிறைவடைந்த போதும் இந்த வருடத்திலிருந்து மேலும் இரண்டு வருடங்களுக்கு இத்தடையை இந்தியா நீடித்தது.

அதன் ஏது நிலைகள் குறித்து நீதியரசர் விக்ரமராஜ் சென் தலைமையிலான தீர்ப்பாயம் நடத்திய விசாரணைகளின் பின் இந்தத் தடை நீடிக்கப்பட்டது நியாயமானது என தீர்ப்பு வழங்கியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஸ்ரீ-2)

# பலாலி வித்தகபுர மக்கள் இவ்வாரம் மீள்குடியேற்றம்

பலாலி பாதுகாப்பு அலுவலகம் அறிவிப்பு

பலாலி பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள வித்தகபுரத்தில் மக்கள் இவ் வாரம்மீள்குடியமர முடியும்என்றுபலாலி பாதுகாப்பு அலுவலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்திற்கான பதவி ஏற்பு நிகழ்வை ஒட்டி இந்த மீள் குடியேற்றம் இவ்வாரம் ஆரம்பமாகவுள்ளது. மீள் குடியேற்றம் தொடர்பாக தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அரச அதிபர், இராணுவ அதிகாரிகள்மற்றும்பொது மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இவ் விடயம் குறித்து முடிவுகளை எடுத்துள்ளனர்.

வித்தகபுரமக்கள் தங்களது பதிவுகளை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நூல் அறிமுக விழா

கலாநிதி மனோன்மணி சண்முகதாசின் வழிகாட்டலின் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பெரியபுராணம்காட்டும் வாழ்வியல் என்றகருத்தரங்குத்தொடரில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல்அறிமுக விழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் கம்பவாரிதி இஜெயராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் நிகழ்த்தவுள்ளார். ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நீர்வேலி செல்லக் கதிர்காம தேவஸ்தான பிரதம குரு நீர்வைமணி கு.தியாகராஜக்குருக் கள் ஆகியோரும் வாழ்த்துரைகளை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன், கோப்பாய் ஆசிரியர்கலாசாலை அதிபர் வே.கா.கண பதிப்பிள்ளை ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

நூலின் அறிமுகவுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் க. இரகுபரனும் நயப்புரையை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனும் நிறைவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் வழங்குவர்.

இந்நூல் உயர் கல்வி மாணவரை மையப்படுத்தி ஆக்கப்பட்டதென்பதும் அதனை கலாநிதி மானோன்மணி சண்முகதாஸ் ,கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் தொகுப்பாக்கம் செய்துள்ளனர்என்பதும்குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# தெற்காசிய விஞ்ஞான ஒலிம்பியாட்டில் யாழ்.மாணவனுக்கு இரண்டாமிடம்

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரத்து 348 பேர் பங்குபற்றிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியொன்றில் யாழ்ப்பாண மாணவர் ஒருவர் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

சர்வதேச சிறுவர்தினத்தைமுன்னிட்டு இக்னோ யுனெஸ்கோ விஞ்ஞான ஒலிம்பியாட் 2010 என்ற பெயரில் கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் நேற்று வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வநித்திலன் சிவபாலன் என்பவரே இந்தப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டவராவார்.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட பல ஆசிய நாடுகளில் அமைக்கப்பட்ட 102 பரீட்சை நிலையங்களில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. இதில் முதல் 41 பேருக்கு பதக்கங்கள் மற்றும் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன. முதலாமிடத்தை இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த எச்.ரஹமான் பெற்றுக் கொண்டார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



அவன் எங்குமே நின்று விடக்கூடாது. 'புற வழிபாடும் சடப்பொருள் வழிபாடும் கீழ்நிலை ஆகும். மேல்நிலைக்கு வர முயன்று, மனத்தால் பிரார்த்தனை செய்தல், அடுத்த உயர்நிலை. ஆண்டவனை உணர்வதுதான் அனைத்திலும் மேலான நிலை' என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதே உறுதிப்பாடு கொண்டவர், விக்கிரகத்தின் முன்னால் முழந்தாளிட்டுக் கொண்டு கூறு வதைக் கேளுங்கள்: 'அவனை சூரியனும் விவரிக்க முடியாது, விண்மீன்களாலும் மின்னலாலும் உணர்ந்துரைக்க முடியாது, தீயும் அவனைத் தேர்ந்துரைக்காது, அவை அனைத்தும் அவனால்தான் ஒளிர்கின்றன.' இந்து யாருடைய விக்கிரகத்தையும் இழிவுபடுத்திப் பேசுவதில்லை. எந்த வழிபாட்டையும் பாவம் என்று கூறுவதில்லை. அது வாழ்க்கையின் இன்றியமையாத படி என்று அவன் ஏற்றுக் கொள்கிறான். 'குழந்தை, மனிதனின் தந்தை.' குழந்தைப் பருவம் பாவமானது, அல்லது வாலிபப் பருவம் பாவமானது என்று வயதானவர் சொல்வது சரியாகுமா? ஒரு விக்கிரகத்தின் மூலமாகத் தனது தெய்வீக இயல்பை ஒருவர் உணர முடியும் என்றால்' அதைப்பாவம் என்று கூறுவது சரியா? இல்லை, அந்த நிலையைக் கடந்த பிறகு அவரே அதைப் பிழை என்று கூறலாமா? இந்துவின் கொள்கைப்படி, மனிதன் பிழையிலிருந்து உண்மைக்குச் செல்லவில்லை, உண்மையில் இருந்து உண்மைக்கு, அதாவது கீழ்நிலை உண்மையிலிருந்து மேல் நிலை உண்மைக்குப் பயணம் செய்கிறான். அவனைப் பொறுத்தவரை, மிகவும் தாழ்ந்த ஆவி வழிபாட்டிலிருந்து அத்வைதம் வரை எல்லாமே பரம்பொருளை உணர்வதற்காக ஆன்மா செய்யும் முயற்சிகள். ஒவ்வொன்றும் அது தோன்றிய இடத்தையும் சூழலையும் பொறுத்தது. ஒவ்வொன்றும் முன்னேற்றத்தின் ஒரு படியைக் குறிக்கிறது. ஒவ்வோர் ஆன்மாவும் மேலே மேலே பறந்து செல்லும் ஓர் இளம் பருந்தைப் போன்றது. அது உயரச் செல்லச் செல்ல மேன்மேலும் வலுவைப் பெற்று, கடைசியில் ஒளிமிக்க சூரியனை அடைகிறது.

# ஹெயிட்டியில் கொலராவுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி



(போர்ட் ஆப் பிரின்ஸ்)

தென் அமெரிக்க நாடான ஹெயிட்டியில் திடீரென கொலரா நோய் பரவி உள்ளது. அங்குள்ள கேப் ஹெயிட்டியன் மற்றும் ஹன்சி ஆகிய பகுதிகளை கொலரா நோய் அதிகளவு தாக்கியுள்ளது.

இந்நோய்க்கு இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளதுடன் இது தொடர்ந்து வேகமாக பரவி வருவதால் மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

அரசு கொலராவை கட்டுப் படுத்த தவறியதால் தான் இந்நோய் வேகமாக பரவுவதாக மக்கள் கோபம் அடைந் துள்ளனர். இதனால் அவர்கள் பல இடங்களிலும் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

கேப் ஹெயிட்டி நகரில் பொலிஸ் நிலையத்துக்கு பொது மக்கள் தீ வைத்தனர். எந்த பகுதிகளிலும் வாகனங்கள் செல்ல முடியாத அளவுக்கு தடுப்புகளை ஏற்படுத்தினர்.

ஹெயிட்டி நாட்டில் ஏற்கனவே உள்நாட்டு கலவரம் நடந்ததால் அங்கு ஐ.நா. அமைதிப்படை நிறுத்தப்பட்டது. அவர்கள் மீதும் மக்களுக்கு கோபம் ஏற்பட்டுள்ளது.

எனவே ஐ.நா. படையினர் மீதும் தாக்குதல் நடத்தினார்கள்.

இதனால் அவர்கள் கலவரக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் 19 பேர் காயம் அடைந்தனர்.

ஹின்சி நகரில் ஐ.நா. படை மீது கல்வீசி தாக்கினார்கள். இதில் வீரர்கள் பலர் காயம் அடைந்தனர்.

கொலராவை கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் நிலைமை மோசமாகவேயுள்ளது.

தற்போது 15 ஆயிரம் பேரை நோய் தாக்கியுள்ளது.

அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# காஷ்மீரின் பெயரை நீக்கியது ஐ.நா. இந்தியா வரவேற்பு; பாக். எதிர்ப்பு

(புதுடில்லி)

இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினை என்ற நெடுநாளைய பட்டியலில் இருந்து காஷ்மீர் பெயரை ஐ.நா. நீக்கியுள்ளது.

இவ் விவகாரம் பாகிஸ்தானுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. இதனை ஐ.நா.வின் இச்செயலை இந்தியா வரவேற்றுள்ளதுடன் பாகிஸ்தான் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இம் மாதத்தில் இருந்து ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலுக்கான தலைமையை பிரிட்டன் ஏற்றுள்ளது.

இந்நிலையில் ஐ.நா.வின் பொதுக் குழுக் கூட்டம் பிரிட்டன் தலைமையில் நடை பெற்றது. அக்கூட்டத்தில் சர்வதேச அரசியலில் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைக்குரிய பகுதிகளின் பெயர்ப்பட்டியலில் இருந்து காஷ் மீரின் பெயர் நீக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# சீனாவில் அடுக்குமாடி குடியிருப்பில் தீ; 53 பேர் உடல் கருகிப் பலியாகினர்

(பீஜிங்)

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் 28 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு அமைந் துள்ளது. இதன் கீழ் பகுதியில் வணிக வளாகமும் மேற்பகுதியில் குடியிருப்புகளும் உள்ளன. இவற்றின் புனரமைப்பு பணிகள் நடைபெற்றன.




அவ்வேளையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டு கட்டடம் முழுவ தும் தீ பரவியது. இதில் சிக்கி 53 பேர் பலியாகியதுடன் 70 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இதனை அடுத்து அங்கு 100 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் வந்து பல மணி நேரம் போராடி தீயை அணைத்தன.

கட்டடத்தில் தீப்பிடித்ததால் அதில் இருந்த ஏராளமான பொதுமக்கள் கட்டடத்தின் மொட்டை மாடிக்குச் சென்று அபாயக்குரல் எழுப்பினர். அவர்கள் அனைவரும் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப் பட்டனர்.

தற்போது தீப்பிடித்த கட்டடத்தில் இடிபாடுகளை அகற்றும் பணி நடந்து வரு கிறது. அதற்குள் ஏராளமானவர்கள் இறந்து கிடக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதோடு உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# டில்லியில் ஐந்து மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் 64 பேர் பலி



டில்லி கிழக்கு பகுதியில் இருக்கும் லட்சுமி நகரில் உள்ள லலிதா பார்க் எனும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் 5 மாடி கட்டடம் ஒன்று திடீரென இடிந்து விழுந்தது. கட்டடத்தின் அடித்தளம் முதலில் பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது.

இதனையடுத்து அதன் மீது 5 மாடிகளும் சரிந்து விழுந்து நொறுங்கி சிதறின. கட்டடம் இடிந்து விழுந்த பகுதி மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியாகும். கண் இமைக்கும் நேரத்துக்குள் 5 மாடி கட்டடம் நொறுங்கி விழுந்ததை கண்ட மக்கள் அதிர்ச்சியில் ஆழ் ந்தனர். இடிபாடுகளில் சிக்கியவர்கள் உதவி கோரி அலறினார்கள்.

விபத்து குறித்து தீயணைப் புத்துறையினருக்கும் பொலி ஸாருக்கும் தகவல் தெரிவிக் கப்பட்டதையடுத்து அவர்களுடன் மாநகராட்சி அதிகாரிகளும் அவ் விடத்திற்கு விரைந்தனர். ஆனால் அந்தப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் மீட்புப்பணிகள் தொடங்குவதில் சற்று தாமதம் ஏற்பட்டது. மீட்புப் பணிக்கான எந்திரங்களை கட்டடம் அருகில் கொண்டு செல்வதும் கடும் சவாலாக இருந்தது. இதையடுத்து தேசிய பேரிடர் சீரமைப்புக் குழுவினர் 250 பேர் அவசரமாக வர வழைக்கப்பட்டனர்.

அவர்கள் வந்த பின்பு இரவு 10 மணிக்கு மீட்புப் பணிகள் தீவிரமானது. பேரிடர் மீட்புப்படை, தீயணைப்புப்படை, பொலிஸார் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோருடன் அந்த பகுதி மக்களும் கட்டட இடிபாடுகளை அகற்றுவதில் ஈடுபட்டனர்.

இடிபாடுகளுக்கு இடையே ஏராளமானவர்கள் சிக்கி உடல் சிதைந்த நிலையில் பிணமாகக் கிடந்தனர். நேற்று முன்தினம் 12 மணி வரை 32 பேரின் உடல்கள் மீட்கப்பட்டிருந்தன. மீட்புப் பணிகள் விடிய விடிய நடந்தன. மேலும் நேற்று அதிகாலை 20 உடல்கள் கண்டெடுக்கப்பட்டதுடன் காலை 9 மணி வரை 64 உடல்கள் மீட்கப்பட்டிருந்தன.

மீட்புப்பணிகள் தொடர்ந்து நடந்த வண்ணமுள்ளன. கட்டட இடிபாடுகளில் மேலும் பலர் சிக்கியுள்ளதாகவும் பலியானவர்கள் எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. (ஸ்ரீ-2)

# பெருநாட்டில் காட்டுவாசி மக்களின் குடியிருப்பு பகுதி கண்டுபிடிப்பு

வடஅமரிக்கா கண்டத்தில் உள்ள அமேசான் காட்டுப்பகுதியில் தற்போதும் ஏராளமான காட்டுவாசி மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு நாகரிகமான மக்களுடன் எந்தத் தொடர்பும் கிடையாது. பெரும்பாலான காட்டுவாசிகள் ஆடைகள் இன்றியே மனிதர்களாக வாழ்கின்றனர். அடர்ந்த காட்டுப் பகுதியில் வசிப்பதால் அவர்களது வசிப்பிடங்களைக் கண்டு பிடிக்க முடியவதில்லை.

இந்த நிலையில் பெருநாட்டில் உள்ள ககுபாகோரி காட்டுப் பகுதியில் காட்டுவாசி மக்கள் புதிய குடியிருப்புப் பகுதி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது.

அரசு ஆய்வு அமைப்பின் இன்டீபா இந்த காட்டுவாசி குடியிருப்பைக் கண்டு பிடித்து உள்ளதாகவும் இந்த அமைப்பினர் காட்டுவாசி மக்களை சந்தித்தும் பேசியுள்ளனர். ஆனால் அவர்கள் பேசும் மொழி இவர்களுக்கு புரியவில்லை.

சைகை மொழியில் மட்டும் உரையாடினர். இந்தக் காட்டுவாசி மக்கள் இடுப்பை சுற்றி மட்டும் ஆடைகளை அணிந்து இருந்தனர். இவர்கள் பனையோலை மற்றும் கரும்பு இலைகளைக் கொண்டு குடிசை வீடுகளை அமைத்துள்ளனர். அங்கு எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. 50 இல் இருந்து 70 பேர் வரை வசிக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவர்கள் உணவாக ஏரி மீன்கள் மற்றும் காய்கறி, பழங்கள் ஆகியவற்றை முக்கிய உணவாகச் சேர்த்து வருகின்றனர். (ஸ்ரீ-2)



பிரான்ஸ் நாட்டின் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது. புதிய இராணுவ அமைச்சராக ஆலன்ஜூப்போ (வலது) பொறுப்பேற்றார். இதனையடுத்து முன்னாள் அமைச்சர் மோரி ஹெர்வான் சக அதிகாரிகளிடமிருந்து பிரியாவிடை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்

# முச்சதம் அடித்து அசத்தினார் கிறிஸ் ஹயில்

# பலமான நிலையில் மேற்கிந்தியத்தீவுகள்

## இலங்கை அணிக்கு ஆரம்பம் சறுக்கல்

(காலி)

கிறிஸ் ஹயில் முச்சதம் அடித்து அசத்த மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 09 விக்கெட்டுக்களையிழந்து 580 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 03 டெஸ்ட், 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் காலியில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிபில் 02 விக்கெட்டுக்களையிழந்து 362 ஓட்டங்களை எடுத்தது. இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஹயில்-சந்தர்போல் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இதில் சிவ்நாராஜன் சந்தர்ப்போல் 32 ஓட்டங்களை எடுத்து ரான்டீவின் பந்துவீச்சில் மஹேல ஜெயவர்த்தனாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் நான்காவது விக்கெட்டுக்காக ஹயிலுடன் இணைந்த நாஷ் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்து மேற்கிந்தியத்தீவுகள் அணி 400 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் ஹயில் 308 பந்துகளில் 250 ஓட்டங்களை எடுத்து பலம் சேர்க்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 450 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் நாஷ் 128 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

### ஹயில் முச்சதம்

மறுமுனையில் அசத்தலாக ஆடிய கிறிஸ் ஹயில் 393 பந்துகளில் தனது இரண்டாவது டெஸ்ட் முச்சதத்தை அடிக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 500 ஓட்டங்களைத் தொட்டது.

இந்தஜோடி 4-வது விக்கெட்டுக்காக 167 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது நாஷ் 159 பந்துகளில் (05 பவுண்டரிகள் உட்பட) 64 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த டயான் பிராவோ 05 ஓட்டங்களுடன் மெண்டிஸின் பந்துவீச்சல் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து பயோ களமிறங்க மறுமுனையில் ஆரம்பம் முதல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கிறிஸ் ஹயில் 437 பந்துகளில் (34 பவுண்டரிகள், 09 சிக்ஸர்கள் அடங்கலாக) 333 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்து வீச்சில் நேரடியாக போல்டாகி ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் சமி வந்தவேகத்திலேயே பூச்சியத்துடன் மெண்டிஸின் பந்துவீச்சில் போல்டாகி ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 556 ஓட்டங்களுக்கு அடுத்தடுத்து 02 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய ரசேல், மெண்டிஸின் ஹட்ரிக் பந்துவீச்சை எதிர்கொண்டார்.

எனினும் ரசேல் நிதானமாகத் தடுத்தாட மெண்டிஸின் ஹட்ரிக் சந்தர்ப்பம் கைநழுவியது.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் சோபிக்காத நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 09 விக்கெட்டுக்களையிழந்து 580 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. இதில் பயோ 08 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ் 06 விக்கெட்டுக்களையும் ரான்டிவ் 03 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்திலேயே டில்சான் அதிர்ச்சி கொடுத்தார்.

ஆரம்பத்துடுப்பாட்டவீரர் திலகரட்ண டில்சான் பூச்சியத்துடன் ரசேலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேற இலங்கையணி 06 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

எனினும் அடுத்துக் களமிறங்கிய அணித்தலைவர் குமார் சங்கக்கார அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேரமுடிபில் இலங்கையணி முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டையிழந்து 54 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சங்கக்கார 33 ஓட்டங்களையும் பரணவிதான 10 ஓட்டங்களையும் உடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.


இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறிஸ் ஹயில் முச்சதத்தைக் கடந்துள்ளார்.

### விரும்பினார், அடித்தார்

காலியில் நடைபெறும் இப் போட்டியில் நேற்று 219 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த கிறிஸ் ஹயில் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று தனது இரண்டாவதுடெஸ்ட் முச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

31 வயதான கிறிஸ் ஹயில் 2005 ஆம் ஆண்டில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 317 ஓட்டங்களைப் பெற்றமையே டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.



இந்த எண்ணிக்கையைக் கடக்க விரும்புவதாக அவர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று 333 ஓட்டங்களை பெற்றதன் மூலம் டெஸ்ட் இன்னிங்ஸில் தனது சிறந்த பெறுதியை அவர் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை 20 வீரர்கள் மொத்தமாக 24 தடவை டெஸ்ட் இன்னிங்ஸ்களில் முச்சதம் குவித்துள்ளனர். டொனால்ட் பிரட்மன், பிரையின் லாரா, கிறிஸ் ஹயில், வீரேந்திர சேவாக் ஆகிய நான்கு வீரர்களும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை முச்சதம் குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிராக மேற்கிந்திய வீரர் பிரையின் லாரா 400 ஓட்டங்களை குவித்தமை டெஸ்ட் இன்னிங்ஸில் வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக விளங்குகிறது.

## முதலாவது போட்டியை சமன் செய்தது பாக்.

யூனிஸ் கான் சதமடித்துக் கைகொடுக்க பாகிஸ்தான் அணி முதலாவது டெஸ்ட் போட்டியை சமநிலையாக்கியது.

பாகிஸ்தான்- தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2 இருபது- 20, 5 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அபுதாபியில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை 3:2 என்ற கணக்கிலும் தென்னாபிரிக்கா கைப்பற்றியது. இந்நிலையில் முதலாவது டெஸ்ட் கடந்த 12 ஆம் திகதி டுபாய் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 380 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 248 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 02 விக்கெட்டுக்களையிழந்து 318 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ஜக் கலிஸ் 135, ஹசிம் அம்லா 118 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் றீமான், சஜிட் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இந்நிலையில் 451 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 157 ஓட்டங்களை எடுத்து 03 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் அடுத்து இணைந்த யூனிஸ்கான்-மிஸ்பா உல்ஹக்கின் பிரிக்கமுடியாத இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 03 விக்கெட்டுக்களையிழந்து 343 ஓட்டங்களை எடுத்தபோது நேற்றைய 05 ஆம் நாள் ஆட்டநேரம் முடிபதற்கு ஒரு மணிநேரம் முன்பதாக இரு அணியினரும் ஏற்றுக்கொண்டதற்கிணங்க சமனிலை என அறிவிக்கப்பட்டது.

இதில் யூனிஸ்கான் 131 ஓட்டங்களையும் அணித்தலைவர் மிஸ்பா உல்ஹக் 76 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இதன் மூலம் 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் சமநிலையானது.

## மென்பந்துச் சுற்றுப்போட்டி

கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தின் அமரர் குருசோத்மன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 10 ஓவர் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் கழகத் தலைவர் எஸ்.தயாபரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இப் போட்டியில் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து குரும்பசிட்டி உதயசூரியன் அணி மோதவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார். (ந-24)

## கைலாசபதி கலையரங்கில்


தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் ஒன்றுகூடல் தொடர்பான முன்னோடி நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்களின் பாரம்பரிய சாஸ்திரிய இசை, நடனம், நாடக அரங்கியல் நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன. (ந-5)

### மக்குலம் இரட்டைச்சதமடித்து அசத்தல்

## இந்திய- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியும் சமநிலையில் முடிபு

(ஹைதராபாத்)



மக்குலம் இரட்டைச்சதமடித்து அசத்த நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 08 விக்கெட்டுக்களையிழந்து 448 ஓட்டங்களை குவித்து இரண்டாவது டெஸ்ட் போட்டியை சமநிலையாக்கியது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதில் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 12 ஆம் திகதி ஹைதராபாத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 350 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்துதுடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன் னிங்ஸில் சகல விக்கெட்டையுமிழந்து 472 ஓட்டங்களை எடுத்தது. இந்நிலையில் 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில்இருந்த நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 04 விக்கெட்டுக்களையிழந்து 237 ஓட்டங்களை எடுத்தது.

ஐந்தாவதும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய நியூசிலாந்து அணி மக்குலத்தின் இரட்டைச்சதத்தின் மூலம் இரண்டாவது இன்னிங்ஸில் 08 விக்கெட்டுக்களையிழந்து 448 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் பிரண்டன் மக்குலம் 308 பந்துகளில்( 22 பவுண்டரிகள், 04 சிக்ஸர்கள் உட்பட) 225 ஓட்டங்களையும் வில்லியம்ஸன் 69 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சிறீசாந் 03 விக்கெட்டுக்களையும் ஓஜா, ரெய்னா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 327 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 68 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டம் நிறைவடைய ஒருமணிநேரம் முன்னதாக இரு அணியின் சம்மதத்துடன் சமநிலையானதாக அறிவிக்கப்பட்டது.

இதில் வீரேந்திர சேவாக் 54 ஓட்டங்களையும், காம்பீர் 14 ஓட்டங்களையும் எடுத்தனர். இப்போட்டியும்வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் தொடர் சமநிலையானது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 20 ஆம் திகதி நாக்பூரில் ஆரம்பமாகிறது

# நாவற்குழியில் குடியேறிய மக்களுடன் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேரில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நாங்கள் வாழ்ந்து வந்த காணிகளில் அவர்கள் (சிங்களவர்கள்) வந்து குடியேறும் போது நாமும் குடியேறத்தானே வேண்டும் என்று யாழ். நாவற்குழியில் குடியமர்ந்துள்ள யாழ். மக்கள் தெரிவித்துள்ளனர். யாழ். புகையிரத நிலையத்தில் இருந்த சிங்களக் குடும்பங்கள் இரவோடிரவாக நாவற்குழியில் குடியமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் குடியேற்றப்பட்டிருந்த காணி அரச காணியென்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தக் காணிகளில் ஏற்கனவே தமிழ் மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

சிங்கள மக்கள் குடியேறியதை அடுத்து அங்கு விரைந்த தமிழ் மக்கள் ஏனைய காணிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களைப் பார்வையிடுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின். நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சென்றிருந்தார். அவரைச் சந்தித்த மக்கள் தமது நிலைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் தனியாரின் வீட்டுக் காணிகளில் வாழ்ந்து வருகின்றோம். 1995ஆம் ஆண்டு இந்த மண்ணில் இருந்து இடம்பெயர்ந்து வெளியேறியிருந்தோம். இந்நிலையில் மீண்டும் நாங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் வெவ்வேறு காணிகளில் அலைந்து திரியும் போது எமது நிலத்தில் சிங்களவர்கள் வந்து எவ்வாறு குடியேற முடியும் என்று கேள்வி எழுப்பினர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன். நாற்பது ஐம்பது வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் இருப்பதற்கு இடமில்லாமல் பல் வேறுபட்ட இடங்களிலும் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு உரிய வசதிகளை அரசு செய்து கொடுத்திருக்க வேண்டும்.

மாறாக அவர்கள் விரட்டப்பட்டிருப்பதுடன், அவர்களின் இடங்களில் சிங்களவர்களும் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் எமது மக்கள் தமது இடத்திற்கு வந்திருக்கின்றார்கள். இந்த நடவடிக்கை சரியான நடவடிக்கையாகும். எனவே அரசு உடனடியாகச் செயற்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுத்து எமது மக்களுக்கான ஆவணங்களை வழங்க வேண்டும்.

இது அரசினுடைய கடமை. அரசு சட்ட ரீதியாகச் செயற்படாமல் அதற்கு மாறாக தென்னிலங்கையில் இருந்து மக்களைக் கொண்டு வந்து எமது மக்களுக்குச் சொந்தமான காணிகளில் குடியமர்த்துவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே எமது மக்கள் குடியேறுவார்கள் என்பதும் அவர்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுமே எமது கருத்தாகும் என்று தெரிவித்தார். (ந-5)

## அரச காணியில் அத்துமீறி...

கையில்,

இவ்வாறு அரச காணிகளில் அத்து மீறி குடியேறியவர்கள் தமிழர்களாக இருக்கலாம் அல்லது சிங்களவர்களாக இருக்கலாம் அரசின் கொள்கை ஒன்றுதான் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் சிங்கள மக்கள் அத்து மீறி குடியேறினார்கள்.

இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி சில தமிழ்க் குடும்பங்களும் அரச காணிக்குள் குடியேறியுள்ளனர்.

இவ்வாறு அத்துமீறி அரச காணிகளில் குடியேறியுள்ள மக்களை வெளியேற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன் வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணி என்பதனால் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்சவும் அம்மக்களை வெளியேற்றுமாறு என்னிடம் கேட்டுள்ளார்.

அரச காணிகளில் அத்து மீறி குடியேறியுள்ள மக்களை வெளியேற்றுவது அரசின் கொள்கை என்ற வகையில் தமிழர்களோ, சிங்களவர்களோ அனைவருக்கும் ஒரே கொள்கை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அண்மையில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களை நான் நேரில் சென்று பார்வையிட்டேன்.

அவர்கள் அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கோடு வந்துள்ளனர் எனக் கருதியே அவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தாக்கியவர்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவர்கள். இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தி மீண்டும் ஓர் அழிவிற்கு நாட்டினை இழுத்துச் செல்லக் கூடாது. மக்கள் அனைவரும் இன, மத, பேதமின்றி ஒற்றுமையாக வாழவேண்டும். (ந-5,6)

## புலனாய்வுப் பிரிவின...

யாழ்ப்பாணத்தில் தாங்கள் மேற்கொண்ட மகஜரில் கையெழுத்துப் பெறும் நிகழ்ச்சியில் பொதுமக்களே குழப்பம் விளைவித்ததாகவும் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக யாழில் பொதுமக்கள் அணிதிரண்டு தாக்குதல் நடத்தியதாகவும் அரசாங்கம் கூறுவதில் உண்மையில்லையென குறிப்பிட்ட ஹந்துன் நெத்தி யாழில் தங்கள் மீது தாக்குதல் நடத்தியது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே எனக் கூறினார்.

சம்பவத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு அதனை உறுதிப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் யுத்தம் நிறைவடைந்து பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு பிரபாகரன் கொல்லப்பட்டுள்ள நிலையில் பிரபாகரன் செய்த செயற்பாடுகளையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் செய்கிறார்.

யாழ். மக்கள் மிகவும் நேசகரமுடையவர்கள். அவர்கள் இவ்வாறு தாக்குதல் நடத்தவில்லை. இவ்வாறான பொய்ப் பிரசாரங்களின் மூலம் தமிழ் மக்களிடமிருந்து ஜே.வி.பியை பிரித்துவிட முடியாது.

யாழ். நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் அரசாங்கத்தின் அனுசரணையுடனேயே இடம் பெற்றுள்ளது என ஹந்துன் நெத்தி குற்றம் சுமத்தியுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த தான் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர், கொழும்பு நோக்கி புறப்பட்டதாகவும் அவர் கூறினார். (ந-5)

## வெடிபொருள் வெடித்து 2 குழந்தைகள் காயம்

முல்லைத்தீவு சிலாவத்துறைப் பகுதியில் பனை மரமொன்றின் கீழ் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு குழந்தைகள் காயமடைந்துள்ளனர்.

பெண்ணொருவர் பனை மரத்தின் கீழ் குப்பைகளைக் கூட்டி எரித்த போது இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். சம்பவத்தில் காயமடைந்த 4 வயது மற்றும் 2 வயதான இரு குழந்தைகளும் சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## வடக்கு மாகாண சபை...

பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்தவகையில் வடக்கு மாகாணத்தில் ஒரு மாகாணசபை இல்லை. இதன் காரணமாக இச்சட்ட மூலத்தை தற்பொழுது அமுல்படுத்த முடியாது.

இச் சட்டத்தின் மூலம் தனிப்பட்ட அமைச்சர் ஒருவருக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவை பாதகமான நிலையையே ஏற்படுத்தும். ஏனெனில் உள்ளூராட்சி எல்லைகளை தீர்மானிப்பதற்கு அமைச்சராலே குழு அமைக்கப்படும்.

இக் குழுவில் சிங்களவரும் இடம்பெறலாம். எனவே இது எமது பிராந்தியத்திற்கு ஏற்புடையதல்ல.

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும் அதன் பின்னரே இச் சட்டமூலம் குறித்து பரிசீலிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-5,7)

## குளிசை விக்கி...

கொடுத்த போது அக் குளிசை தொண்டையில் சிக்கி மூச்சுத் திணறல் ஏற்பட்டதாகவும் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் குழந்தை இறந்ததாகவும் தெரிய வருகிறது.

குழந்தையின் சடலம் வட்டுக் கோட்டை பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இந்திய வெளியுறவு...

னைத் தவிர எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகளையும், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அதேவேளை கொழும்பில் நடைபெறும் இலங்கை-இந்திய வருடாந்த கூட்டுக் கூட்டத்தில் பிரதான அழைப்பாளராக கலந்துகொள்ளவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணத்தில் தூதரகப் பிரதிநிதி அலுவலகங்களை திறந்து வைக்கவுள்ளார். (ந-5)

## விநாயகம் தலை...

புலிகளின் ஆயுத மற்றும் புலனாய்வுப் பிரிவினர் இயங்குவதற்கு முனைப்புக் காட்டி வருவதாக குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பாவின் பல பகுதிகளில் இருந்தும் ஆயுதப் போராட்டத்தை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவராகக் கருதப்படும் விநாயகம் என்பவர் முயற்சித்து வருகின்றார்.

விநாயகம் மிகவும் ஆபத்தான நபர். கடந்தகாலங்களில் தெற்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள், படுகொலைகள் போன்றவற்றை விநாயகம் என்பவரே வழி நடத்தியுள்ளார்.

குறித்த விநாயகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து இலங்கை அரசாங்கம் விழிப்புடன் செயற்பட வேண்டும். விநாயகம் ஐரோப்பாவில் சுதந்திரமாக சுற்றித் திரிவதாகவும் அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விநாயகம் கொல்லப்பட்டதாக இராணுவம் நம்பிக்கை வெளியிட்ட போதிலும் உண்மையில் விநாயகம் உயிரிழக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விநாயகம் வெளிநாட்டில் இருப்பதாக கடந்த திங்கள் வலம்புரி செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (16.11.2010) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினை பெற்ற எமது நிறுவன உத்தியோகத்தர்

### திரு. கணேசபிள்ளை முகுந்தன்

அவர்களை மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

இல.58, நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (2879)

இயக்குநர்களும், பணியாளர்களும்,
R.V.G ஸ்தாபனமும்,
R.V.G மெடிக்கல் ஸ்தாபனமும்



மாபெரும் விலைக்கழிவு... 3 வருட உத்தரவாதம்...எங்கும் இல்லாத அதிரடி விலையில்.

கணனிகளை இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் பெறுவதற்கான அனைத்து வசதியும் செய்து கொடுக்கபடும்.

PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD




PCST 1 — 3 Year's Warranty
Intel Atom 1.7Ghz
Intel D410PTL Mother Board
320GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer, Casing
550W Power supply
15' LCD Acer/AOC Monitor, Keyboard
Mouse, Speaker
ONLY Rs36,500/=

PCST 2 — 3 Year's Warranty
Intel Core 2 Duo 2.93Ghz
Foxcorn Mother Board
500GB Harddisk
Kingston 2GB Ram
DVD Writer,Casing
550W Power Supply
19' LCD Acer/ LG Monitor, Keyboard
Mouse, Speaker
ONLY Rs53,500/=

PCST 3 — 3 Year's Warranty
Intel Dual Core 2.8Ghz
Foxcorn Mother Board
320GB Harddisk
Kingston 1GB Ram
DVD Writer,Casing
550W Power Supply
15' LCD Acer/AOC Monitor
Keyboard
Mouse,Speaker
ONLY Rs41,800/=

PCST 4 — 3 Year's Warranty
Intel i3 2.93Ghz
Intel Mother Board
500GB Harddisk
Kingston 2GB DDR3 Ram
DVD Writer, Casing
550W Power Supply
19' LCD Acer/LG Monitor, Keyboard
Mouse, Speaker
ONLY Rs58,200/=

Service & Repairing On Call Service Contact Us 0212229644

Computer Problems? Have Virus? Or Computer Just Running Slow?Spyware Trouble?

IMATION PENDRIVE மிகக் குறைந்த விலையில் 5 வருட உத்தரவாதத்துடன்.

Available Multi HighSpeed Dongle

M.M.V Road,Nelliady. T.P: 021 226 4999

305, Kasthutriyar Road,Jaffna.T.P: 021 222 1101, 021 222 9644 E.Mail: pcst@pcstjaffna.com, Web: www.pcstjaffna.com

No:5, Kanakapuram Road, Kilinochchi. (சி-1637)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்கா [illegible] இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.